வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : news@eelanadu.lk   மலர் : 04   07.06.2023 புதன்கிழமை   இதழ் : 180   பக்கங்கள் : 16




# மக்கள் இறைமையை பிரயோகிக்கும் தீர்ப்பே மாகாண சபைகள் தேர்தல்

## தீர்ப்பின் மூலம் மீண்டும் நிரூபித்தது உயர்நீதிமன்றம்

கொழும்பு, ஜூன் 07

**“மாகாண சபைகள் தேர்தல் மக்களின் இறைமையைப் பிரயோகிக்கும் தீர்ப்பே. அதனை காலம் தாமதிக்காமல் நடத்த வேண்டும் என்று சட்டமா அதிபரும் மனுதாரர் எம். ஏ. சுமந்திரனும் விடுத்த கோரிக்கையை நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம்” என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.**

இந்தத் தீர்ப்பு மூல மாக, மாகாண சபைகள் தேர்தல் ஊடாக மக்கள் இறைமையை பிரயோ கிக்க முடியும் என்ற தனது முன்னைய தீர்ப்பை உயர்நீதிமன்றம் மீண்டும் உறுதி செய்துள்ளது.

மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் நோக்கில் மாகாண சபை தேர்தல்கள் (திருத்தம்) எனும் தனிநபர் சட்ட மூலத்தை சுமந்திரன் எம். பி. கடந்த ஆட்சிக் காலத் தில் கொண்டு வந்திருந் தார். அந்த அரசாங்கத் தின் பதவிக்காலம் முடிவ டைந்ததைத் தொடர்ந்து அந்த சட்டமூலம் செல்லு படியற்றதானது.

இந்த நிலை யில், தற் போதைய அரசாங்கத்தின்

15

## வெறும் வரலாறு கூறலுடன் முடிந்தது தமிழரசின் கூட்டம்!

கொழும்பு, ஜூன் 07

தமிழரசு கட்சியின் அரசியல் குழு கூட்டம் நேற்று முற்பகல் சம்பந்த னின் இல்லத்தில் அவரின் அழைப்பின் பேரில் நடைபெற்றது.

கட்சிக்குள் நடக்கும் கோஷ்டி பூசல்கள், தலை மைக்கான போட்டி என் பவை தொடர்பில் ஆரா யப்படும் என்ற எதிர் பார்ப்புடன் நடந்த இந் தக் கூட்டம் வெறும் தமி ழரசு கட்சியின் வரலாறை மட்டும் கூறியதுடன் நிறைவடைந்ததாகத் தெரிய வருகின்றது.

அரசியல் குழு கூட் டத்தை கூட்டிய சம்பந் தன் தமிழரசு கட்சியின் வரலாறை கூறினார். அத்துடன், திருகோண மலை மாவட்டத்துக்கான தனது இணைப்பாளர் குகதாசன் நீக்கப்பட்ட விடயத்தையும் கட்சியின ருக்கு தெரியப்படுத் தினார்.

இதன் பின்னர், கட்சியின் தலை வர் மாவை சேனா

15

## கஜேந்திரகுமார் எம். பிக்கு வெளிநாட்டு பயண தடை!

கிளிநொச்சி, ஜூன் 07

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளு மன்ற உறுப்பினர் கஜேந் திரகுமார் பொன்னம்ப லத்துக்கு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் வெளிநாட்டு பயணத் தடை நேற்று விதித்தது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸ் நிலையத்தில் முன்னிலை யாகி வாக்குமூலம் வழங் கும் வரை நாட்டை விட்டு வெளியேற தடைவிதிக்க வேண்டும் என்று மருதங் கேணி பொலிஸ் நிலை யம் சார்பில் விடுக் கப்பட்ட கோரிக் கையை ஏற்றே

15

## கட்சியின் வளர்ச்சியை முடக்கவே எம் மீது அச்சுறுத்தல் கட்டவிழ்ப்பு

### கஜேந்திரகுமார் எம். பி. சாடல்

கொழும்பு, ஜூன் 07

எமது கட்சியின் தவிர்க்கமுடியாததும் - அபரிமிதமானதுமான வளர்ச்சியை முடக்கும் நோக்கிலேயே தம்மை அச்சுறுத்தும் வகையி லான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக் கப்படுகின்றன என்று சாடி யுள்ளார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான கஜேந்திரகு மார் பொன்னம்பலம்.

15

## “82 சதவீதமான மரணங்களுக்கு தொற்றா நோய்களே காரணம்”

மட்டக்களப்பு, ஜூன் 07

நாட்டில் 82 சதவீதமான மரணங்கள் தொற்றா நோய்களாலேயே ஏற்படுகின்றன. தொற்று நோய்களால் ஏற்படும் மரணங்கள் வெறும் 8 சதவீதமே என்று மட்டக்களப்பு - ஆரையம்பதி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் இ. உதய குமார் தெரிவித்துள்ளார்.

நீரிழிவு, புற்றுநோய், சிறுநீரக பாதிப்பு போன்ற தொற்றா நோய்களாலேயே நாட்டில் 82 சதவீத மான மரணங்கள் ஏற்படுகின்றன. ஆனால் தொற்று நோய்க்கு கொடுக்கின்ற கரிசனையை தொற்றா நோய்களுக்கு மக்கள் கொடுப்பதில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## வரணி விபத்தில் இளைஞர் மரணம்

தென்மராட்சி, ஜூன் 07

வற்றாப்பளை அம்மன் ஆலயத்துக்கு சென்று விட்டு மோட்டார் சைக் கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்த இளைஞர் மின்கம்பத்துடன் மோது ண்டு உயிரிழந்தார்.



நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை 3 மணியளவில் இடம் பெற்ற இந்த விபத்தில் தென்மராட்சி - வரணி பகுதியில் இடம் பெற்ற இந்த விபத் தில் குடத்தனையை

15

## காரைக்கால் - யாழ். கப்பல் சேவை எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 07

இந்தியாவின் புதுச் சேரி மாநிலம் - காரைக் கால் துறைமுகம் மற்றும் யாழ்ப்பாணம் - காங்கே சன்துறை துறைமுகம் இடையிலான சரக்கு கப்பல் சேவை எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமா கிறது.

இலங்கையில் இயங் கும் நிறுவனம் ஒன்றுக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் மேலும் நான்கு நிறுவனங் கள் கடல் வழியாக பொருட்களை ஏற் றிச் செல்வதற்கான

15

## படை வசமுள்ள காணிகளை விடுவிப்பதை தீர்மானிக்க குழு!

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ்ப்பாணம் மாவட் டத்தில் படைகளின் வச முள்ள காணிகளை விடு விப்பது தொடர்பில் தீர் மானிப்பதற்கு குழு ஒன்றை அமைப்பதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் படையினர் வசமுள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பாக நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப் பட்டது.

படை தரப்பினரையும் பொலிஸாரையும் உள்ள டக்கிய இந்தக் குழு குறு கிய காலப் பகுதிக்குள் அதிகபட்சமாக விடுவிக் கக்கூடிய காணி களை அடையா ளப்படுத்த வேண்

15

## குற்றவாளியை நீதிபதியாக்கும் நீதியே இலங்கையில் உள்ளது!



### சிறீதரன் எம். பி. சபையில் சாடல்

- ஜனாதிபதி ரணில் பயங்கரவாதி
- அலி சப்ரி பதவி விலக வேண்டும்

கொழும்பு, ஜூன் 07

துப்பாக்கியால் சுட முயன்றவனை நீதிபதி யாக்கி அச்சுறுத்தப்பட்ட வரை குற்றவாளியாக்கும் நீதியே இலங்கையில் உள்ளது என சுட்டிக்காட் டியுள்ளார் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.

நேற்று பாராளுமன் றத்தில் உரையாற்றிய போது இதனை தெரி வித்தார்.

தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பவர்கள் துப்பாக்கி முனையில் தான் அடக்கப்படுவார் கள் என்பதை மீளவும் ஒருமுறை சிங்கள ஆட்சி யாளர்கள் நிரூபித்துள்ள னர் என்றார்.

“கஜேந்திர குமார் நாட்டை விட்டு வெளியேற

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்துக் கற்கைகள் பீடம் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்து கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி ச. பத்மநாபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பல்கலைக்கழக துணைவேந்தர் சி. சிறிசற்குணராசா, வாழ்நாள் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர், இளைப்பாறிய பேராசிரியர் திருமதி க. இராமநாதன், இளைப்பாறிய பேராசிரியர் மா. வேதநாதன் ஆகியோர் விருந்தினர்களாகப் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வின்போது, சைவத் திருக்கோவிற் கிரியை நெறி, இந்துப் பண்பாட்டு மரபுகள், சமஸ்கிருத இலகு போதம், வடமொழி இலக்கிய வரலாறு ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வும் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகப் பங்கேற்ற துணைவேந்தர், "யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஐம்பது ஆண்டுகளில் ஆரம்பிக்கப்படும் இந்தப் பீடம் சாதாரணமான ஒரு நிகழ்வு அல்ல. ஒரு பெரும் எதிர்வுகூறலுடன் தொடங்குகிறது - என்று தெரிவித்தார். (ஐ)

# வேலை பெற்றுத்தருவதாகக் கூறி மன்னாரில் மோசடி சம்பவங்கள்!

### மக்களுக்கு அரச அதிபர் எச்சரிக்கை

மன்னார், ஜூன் 07

மன்னார் மாவட்டத்தில் மாவட்ட செயலகம் உள்ளடங்கலாக அரச திணைக்களங்களில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி பெரும் நிதி மோசடி செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ. ஸ்ரான்லி டிமெல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், அண்மைக்காலமாக மன்னார் மாவட்டத்தில் அரச வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி சில நபர்கள் இளைஞர், யுவதிகளிடம் பெருந்தொகை பணத்தை பெற்று மோசடி செய்துள்ளனர்.

குறிப்பாக, மன்னார் மாவட்ட செயலகம் உள்ளடங்கலாக மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் வேலை பெற்று தருவதாகக் கூறி குறித்த குழுவினர் நிதி மோசடியில் ஈடுபட்டு வருவது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

செவ்வாய்க்கிழமை (நேற்று) கூட இவ்வாறு வேலை பெற்று தருவதாக பணத்தை பெற்றுக் கொண்டு திணைக்களத்தின் உயர் அதிகாரிகளோடு குறித்த மோசடிகாரர்கள் கதைப்பது போல் தொலைபேசியூடாக கதைத்து பாசாங்கு செய்து மக்களை ஏமாற்றுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

இது மட்டுமின்றி பொருட்கள் தருவதாக கூறியும் நிதி மோசடியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆகவே, இது தொடர்பாக மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிரதேச செயலகங்கள் அரச திணைக்களங்களில் அரச பதவி பெறுவதற்கு நிதி செலுத்த வேண்டியதில்லை. அதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை.

இவ்வாறான நிதி மோசடிகளில் ஈடுபடுபவர்கள் உங்களை சந்திக்கும்போது உடனடியாக அவர்களுடைய அடையாள அட்டையை உங்களுடைய தொலைபேசியில் பதிவு செய்து கொள்வதோடு உங்கள் அருகில் உள்ள கிராம அலுவலர்கள் அல்லது பொலிஸ் நிலையத்துக்கு தகவல்களை வழங்கும் படியும் கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறான நிதி மோசடிகள் மன்னார் மாவட்டத்தில் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றேன் - என்றார். (ஐ)

## "கஜேந்திரகுமாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும்"

கொழும்பு, ஜூன் 07

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி சிங்கள ராவய அமைப்பு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் கடிதம் ஒன்றை கையளித்துள்ளது.

பாராளுமன்ற கட்டடத் தொகுதிக்கு செவ்வாய்க்கிழமை வந்த அக்மீமன தயாரட்ன தேரர் தலைமையிலான சிங்கள ராவய அமைப்பினர் சபாநாயகரை சந்திக்க முயன்றபோதும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

சபாநாயகருக்கு பதிலாக பாராளுமன்ற உதவி செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்ன கடிதத்தை பெற்றுக்கொண்டார். இதனை தொடர்ந்து இந்த கடிதம் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்ற உறுப்பினர் சிறப்புரிமை, அதிகாரத்தை பயன்படுத்தி குழப்பங்களை விளைவிக்கும் வகையில் செயல்பட்டுள்ளார். ஆகவே, அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அக்கடிதத்தில் சிங்கள ராவய அமைப்பினர் வலியுறுத்தியுள்ளார் என்று அறிய முடிகிறது. (ஐ)

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ்ப்பாணம் - வண்ணை. நாவலர் மகா வித்தியாலயம் சமய குரவர் நால்வர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கும்பாபிஷேக கர்மாரம்பமாகும். இன்று நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்தலாம்.

நாளை வியாழக்கிழமை காலை 6 மணி முதல் யாகபூசை நடைபெற்று 8.30 மணிக்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ)

## பெறுமதி சேர் வரி விதிகளில் திருத்தம் ஏற்படுத்தத் தீர்மானம்!

கொழும்பு, ஜூன் 07

பெறுமதிசேர் வரி (வற்) விடுவித்தலின் அடிப்படை விதிமுறை மற்றும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமையை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியளிப்பு வேலைத்திட்டத்துக்கமைய, பெறுமதிசேர் வரி பற்றிய முக்கிய இரண்டு மறுசீரமைப்புக்களை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது.

அதன்கீழ், அதிகளவு விடுவித்தலை நீக்கி, பெறுமதிசேர் வரி முறைமையை மறுசீரமைப்புச் செய்தல், இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர்வரி முறைமை நீக்கப்பட வேண்டியுள்ளது.

தற்போதுள்ள பெறுமதிசேர் வரியை விடுவித்தல் மீண்டும் அடிப்படை விதிமுறைகளுக்கமைய அண்ணளவாக மொத்த தேசிய உற்பத்தியின் 1.2 சதவீதமான வரி வருமா னத்தை அதிகரிப்பதற்கு வாய்ப்புண்டு.

அதற்கமைய, கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளுக்கான விடுவிப்புக்களைப் போலவே, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீதான அழுத்தங்களை இலகுபடுத்துகின்ற மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளை பாதுகாக்கின்ற விடுவிப்புக்களை தொடர்ந்தும் பேணிக் கொண்டு, பெறுமதிசேர் வரி விடுவிப்புகளிலிருந்து அதிகளவை நீக்குவதற்கும், பெறுமதிசேர் வரியை மீளச் செலுத்துவதற்காக மிகவும் முறைசார்ந்த பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்தி, தற்போது நடைமுறையில் உள்ள இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரி முறைமையை எதிர்வரும் 2024 ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அகற்றுவதற்கு ஏற்றாற்போல் பெறுமதிசேர் வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# 3 வருடங்களில் 1,163 சட்டவிரோத துபாக்கிகள் கைப்பற்றப்பட்டன!

### பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கொழும்பு, ஜூன் 07

போதைப்பொருள் கடத்தலுடன் சட்டவிரோத துப்பாக்கிகளும் நாட்டுக்குள் கொண்டுவரப்படுகின்றன. விசேட அதிரடிப்படையின் சோதனை மூலம் கடந்த 3 வருடங்களில் 1,163 சட்டவிரோத துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொது மக்கள பாதுபாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாய்மொழிமூல கேள்வி நேரத்தின் போது ஆளும் கட்சி உறுப்பினர் சஞ்சீவ எதிரிமன்னவால் கேட்கப்பட்ட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் பல்வேறு பகுதிகளில் தற்போது மனித படுகொலைகள் உள்ளிட்ட பாரதூரமான குற்றச்செயல்கள் இடம்பெற்று வருகின்றன. அதேநேரம் அடிக்கடி மேற்கொள்ளப்படும் கொள்ளைகள் தொடர்பான புலனாய்வுகள் உடனடியாக மேற்கொள்ளப் படுவதில்லை. அதனால் சடுதியாக வியாபித்து வரும் பாதாள உலகக் குழுக்களின் செயல்பாடுகளையும் அவை சார்ந்து இடம்பெறும் கொலைகளையும் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா என கேட்ட கேள்விக்கே அமைச்சர் இவ்வாறு பதிலளித்தார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து பதிலளிக்கையில்,

நாட்டில் அதிகமான சட்டவிரோதமாக பயன்படுத்தப்படும் துப்பாகிக்கிகளில் அதிகமானவை 30 வருட யுத்தத்துக்கு பின்னர் தெற்கு பிரதேசங்களுக்கு வந்தவையாகும். அத்துடன், கடல் மார்க்கமாக போதைப்பொருள் கடத்தும்போது அதனுடன் சட்ட விரோதமாக துப்பாக்கிகளும் எடுத்துவரப்படுகின்றன.

அண்மையில் பண்டாரகம பிரதேசத்தில் கைப்பற்றப்பட்ட 192 கிலா ஹெரோயின் போதைப்பொருடன் பிஸ்டல் ரக துப்பாக்கிகள் 10 கைகப்பற்றப்பட்டிருந்தன. இவ்வாறு தேடுதல், சுற்றிவளைப்புகளின் மூலமே இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

அத்துடன், போதைப் பொருள் கடத்தல் மற்றும் கொள்ளைகளை தடுப்பதற்கு விசேட அதிரடிப்படைகளின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்றார். (ஐ)

## பாராளுமன்ற மேற்பார்வை குழுக்களுக்கு பொதுஜன பெரமுன கட்சியினர் நியமனம்!

கொழும்பு, ஜூன் 07

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்ற மேற்பார்வைக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிணங்க, தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ,சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் சட்டத்தரணி மதுர விதானகேவும், பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினை தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவுக்கு சரத் வீரசேகரவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத விவகாரங்கள் மற்றும் சகவாழ்வு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கோகிலா குணவர்த்தன, சுற்றாடல், இயற்கை வளங்கள், நிலைபேறான அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஜயந்த கெட்டகொடவும், வெளிநாட்டுத் தொழில்கள், உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வை குழுவில் காமினி லொக்குகேயும், சுகாதாரம் பற் றிய துறைசார் குழுவுக்கு முதிதா பிரஷாந்தியும் நியமிக்கப்பட் டுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu
07.06.2023 புதன்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 24

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# பொன். சிவகுமாரனிலிருந்து?

பொன். சிவகுமாரன் முதலாவது தற்கொடை போராளியாவார். 1974 ஆம் ஆண்டு பொலிஸாரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் அருந்தி உயிரிழந்தார். ஈழ ஆயுதப் விடுதலைப் போராட்ட மரபில் இலட்சியத்துக்காக உயிரை தியாகம் செய்யும் மரபை ஆரம்பித்து வைத்தவர் பொன். சிவகுமாரன்தான். அவரின் 49ஆவது நினைவுதினம் நினைவு கொள்ளப்பட்டிருக்கின்றது. வெறும் தேர்தல் அரசியலாக சுருங்கிக்கிடக்கும் தமிழ்த் தேசிய அரசியல் போக்கில் சிவகுமாரன் போன்ற ஒருவரை நினைவு கொள்வதன் மூலம் எவ்வாறான உறுதிமொழியை கட்சிகள் மேற்கொள்கின்றன?

சிவகுமாரன் மட்டுமல்ல அதற்கு பின்னர் சிவகுமாரனை பின்தொடர்ந்து ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் தங்களின் உயிர்களை தியாகம் செய்திருக்கின்றனர். அன்றைய சூழலில் எந்த இயக்கங்கள் என்னும் கேள்வி இருந்திருக்கவில்லை - போராட்டங்களில் இணையும் தங்களுக்குள் துரோகி, தியாகி, ஒட்டுக்குழு, கூலிப்படை என்றெல்லாம் பிளவுகளும் வசைகளும் உருவாகப்போகின்றது - என்னும் ஒரு சிறு சந்தேகம்கூட அன்றைய தலைமுறையிடம் இருந்திருக்கவில்லை.

போராட செல்லும் தங்களுக்குள் தங்களையே அழிக்கும் போட்டியொன்று இடம்பெறும் என்றும் அன்றைய தலைமுறையில் எவருமே சிந்தித்திருக்கவில்லை. எவர் அதிகாலையில் கதவை தட்டினார்களோ அவர்களுடன் போராட சென்றது அன்றைய தலைமுறை. போன பின்னர்தான், அது விடுதலைப் புலிகள் இயக்கம் அல்லது ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அல்லது புளொட், ரெலோ மற்றும் ஈரோஸ் என்னும் பெயர்கள் அவர்களுக்கு பரீட்சயமாகின. அண்ணன் விடுதலைப் புலிகள் இயக்கத்திலும் தம்பி புளொட்டிலும் இணைந்து தேசத்தை மீட்பதற்கான கனவைக் கண்டனர். அன்றைய சூழலில், ஆங்கில எழுத்துகள் அனைத்திலும் இயக்கங்கள் இருந்தன என்று - நகைச்சுவையாகக் கூறுமளவுக்கு இயக்க சிந்தனை அன்றைய தலைமுறையை ஆக்கிரமித்திருந்தது.

ஆனால், ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பின்னர் அனைத்து நம்பிக்கைகளும் சிதையத்தொடங்கின. ஏன் - எதற்கு என்னும் கேள்விகள் இல்லாமல் சகோதரர்களாகப் போராட வேண்டியவர்கள் தங்களுக்குள் யார் பெரியவர்கள் என்னும் அதிகார போட்டிக்குள் சிக்கிக் கொண்டனர். இறுதியில் தமிழ் மக்களின் விடுதலைக்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களில் - யார் துரோகி, யார் தியாகி, யார் நல்ல போராளி, யார் அரசின் ஆதரவாளன், இந்தியாவின் ஆதரவாளன் - என்னும் ஆராய்ச்சிக்குள் அன்றைய தலைமுறை சிக்கிச் சீரழிந்தது. அந்தச் சீரழிவு இப்போதும் தொடர்கின்றது.

சிவகுமாரனை நினைவுகொள்ளும் இன்றைய அரசியல் சூழலை திரும்பிப் பார்த்தால் தமிழ் மக்களிடம் என்ன எஞ்சியிருக்கின்றது? பெருமைப்பட்டுக் கொள்ளும் நிலையில் நம்மிடம் என்ன இருக்கின்றது? அன்றைய தலைமுறையின் தியாகங்கள் தொடர்பில் உண்மையிலேயே - சிறியளவில்கூட நன்றியுணர்வுடன் கூடிய கரிசனை இருக்குமாயின் இன்று தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் கட்சிகள் தங்களுக்குள் ஒற்றுமையுடன் அல்லவா செயல்பட்டிருப்பார்கள்? யுத்தம் முடிவுற்று 14 வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும்கூட தமிழ் தேசியத்தை பெயரில் வைத்திருக்கும் கட்சிகளால் தேர்தல் நலன்களை தாண்டிச் செயலாற்ற முடியவில்லையே! ஒரு பரந்த ஐக்கிய முன்னணியை உருவாக்க முடியவில்லையே ஏன்?

சிவகுமாரன் போன்றவர்களை நினைவு கூருவதென்பது ஒரு சாதாரண சடங்கல்ல. அதற்கு பின்னால், ஒன்றிணைந்த செயலுக்கான அர்ப்பணிப்புக்கான, கற்றுக்கொள்ளலுக்கான உறுதிமொழியிருக்க வேண்டும். அதுதான் அவ்வாறானவர்களுக்கு செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும். கடந்தகாலம் என்பது நமது அரசியலில் ஒரு படிப்பினை மட்டுமே. நமது எதிர்காலத்தை வரையறுக்க விரும்பினால், கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொள்வதைத் தவிர, வேறு எந்தவொரு தெரிவும் தமிழ் சமூகத்துக்கு முன்பாக இல்லை. ஏனெனில், இத்தனை தியாகங்கள் புரிந்தும் தமிழர்களின் எதிர்பார்ப்புகளில் எதனையுமே அடைய முடியவில்லை - ஏன்? அவ்வாறாயின் தமிழர்களுக்கான நன்மை என்பது எந்தளவு தியாகங்கள் புரிந்தோம் - புரியத் தயாராக இருக்கின்றோம் என்பதைக் கொண்டு தீர்மானிக்கப்படுவதல்ல. இதுதான் இதுவரையான படிப்பினை.

# சினோபெக் வருகையின் பின்னர் எரிபொருளுக்கு நிலையான விலை!

*கொழும்பு, ஜூன் 07*

முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக்கின் வணிக நடவடிக்கைகளை விரைவில் இலங்கையில் தொடங்குவதை தொடர்ந்து, எரிபொருளுக்கான நிலையான ஆகக்குறைந்த மற்றும் ஆகக்கூடிய விலையை அரசாங்கம் அறிமுகப்படுத்தும் என்று அரசாங்கத்தின் உயர்மட்ட தகவல் தரப்புகள் தெரிவிக்கின்றன.

சினோபெக் நிறுவனம் இலங்கையில் எரிபொருளை விநியோகிக்கும் ஒப்பந்தத்தில் ஏற்கனவே கைச்சாத்திட்டுள்ளது.

சினோபெக்கிற்கு நாட்டில் இயக்கப்படும் 150 எரிபொருள் நிலையங்கள் ஒதுக்கப்படும்.

இதுதவிர, இரண்டு வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்களுக்கு நாட்டில் செயல்பட அனுமதி வழங்கப்படவுள்ளது.

தற்போது, அரசுக்கு சொந்தமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி ஆகிய நிறுவனங்களே நாட்டில் எரிபொருள் விநியோகஸ்தர்களாக உள்ளன.

இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் செயல்படத் தொடங்கியதும் எதிர்காலத்தில் விலை சூத்திரத்தின்படி ஆகக்குறைந்த மற்றும் ஆகக்கூடிய நிலையான விலை அறிமுகப்படுத்தப்படும் என்று அரசாங்கத்தின் உயர்மட்ட தகவல் தரப்புகள் தெரிவிக்கின்றன.

"நிறுவனங்கள் நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்குள் போட்டித்தன்மையுடன் இருக்க வேண்டும். இருப்பினும், விரைவில் கடுமையான விலைக் குறைப்பை நாங்கள் எதிர்பார்க்க முடியாது," என்று அந்த தகவல் தரப்பு தெரிவித்துள்ளது.

எரிபொருள் ஒதுக்கீட்டுக்கான கியூ.ஆர் குறியீட்டு முறையிலிருந்தும் அரசாங்கம் விரைவில் விலகும் என்றும் அந்த தரப்பு தெரிவித்தது.

முக்கிய மசகு எண்ணெய் விநியோகஸ்தரான சவூதி அரேபியா, விநியோகத்தை குறைக்க முடிவு செய்ததால், உலக சந்தையில் எரிபொருள் விலை உயர வாய்ப்புள்ளது என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# பசுமை அறிவொளி நிகழ்வு நாவற்குழியில் முன்னெடுப்பு



*யாழ்ப்பாணம், ஜூன் 07*

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நாவற்குழியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பசுமை அறிவொளி நிகழ்ச்சியை நடத்தியுள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களிடையே சூழல் அறிவை புகட்டி விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களைச் சூழல் பாதுகாப்பில் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடன் பசுமை அறிவொளி என்ற நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, நாவற்குழி முத்தமிழ் கிராமத்தில் இந் நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

இந்த ஆண்டின் சுற்றுச் சூழல் தினத்தின் கருப்பொருளாக ஐக்கிய நாடுகள் சபை 'பிளாஸ்ரிக் மாசைத் தோற்கடிப்போம்' என்ற கருப்பொருளை தெரிவு செய்துள்ளது. இந்தக் கருப்பொருளுக்கு அமைவாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் இந்த நிகழ்ச்சியில் உரையாற்றியதோடு, பங்கேற்ற மாணவர்களுக்கு 'பிளாஸ்ரிக்கின் பிடியில்' என்ற கைநூலையும் வழங்கி வைத்தார்.

அத்துடன், ரொறன்ரோவின் மனிதநேயக் குரலின் அனுசரணையோடு மாணவர்கள் அனைவருக்கும் அப்பியாச கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சனிக்கிழமையும் மின்சார சபைக்கு பணம் கட்டலாம்!


*யாழ்ப்பாணம், ஜூன் 07*

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் வடமாகாண பிரதி பொது முகாமையாளர் பணிமனையின் பணம் செலுத்தும் பகுதி பாவனையாளர்களின் நலன் கருதி பிரதி சனிக்கிழமை தோறும் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை முதல் இது நடைமுறைக்கு வருகின்றது. எனவே, பாவனையாளர்கள் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை சேவைகளை பெற முடியும் என்று வடக்கு மாகாண பிரதி பொது முகாமையாளர் எந்திரி செ. பிரபாகரன் அறிவித்துள்ளார்.

(ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



**ஜுன் - 07 புதன்கிழமை**
**சோபகிருது வருடம் - வைகாசி 24**
**நல்ல நேரம் : 09.00 - 10.30**
**ராகு காலம் : 12.00 - 01.30**
**திதி : சதுர்த்தி**



## இன்றைய ராசிபலன்

### மேடம்
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் நிறைந்த நாள்.

### இடபம்
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வுமனப்பான்மை தலை தூக்கும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத்தன்மை தேவைப்படும் நாள்.

### மிதுனம்
மூத்த சகோதரர்கள் வகையில் உதவிகள் உண்டு. வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் உங்களைத் தேடி வருவார்கள். சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

### கடகம்
குடும்பத்தில் உள்ளவர் களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சக ஊழியர்களை விட அதிகாரிகளிடம் செல்வாக்கு கூடும். அமோகமான நாள்.

### சிம்மம்
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். உங்களின் கனவு நனவாகும் நாள்.

### கன்னி
எதிர்ப்புகள் அடங்கும். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

### துலாம்
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும் நாள்.

### விருட்சிகம்
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. பணிகளை விரைந்து முடிப்பீர்கள். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

### தனுசு
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக வரும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

### மகரம்
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். லாபம் சுமாராக இருக்கும். மறைமுக எதிர்ப்புகள் வந்து செல்லும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

### கும்பம்
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். உத்தியோகத்தில் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உங்களுக்கு சிறப்பான நாள்.

### மீனம்
உணர்ச்சிவசப்பட்டு பேசுவதை விட்டு, அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள், வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# ஆளுநரின் கருத்துக்கு அமைச்சர்கள் எதிர்ப்பு!

சென்னை, ஜூன் 07

முதலீட்டாளர்களை சந்தித்து பேசுவதால் மட்டும் முதலீடுகள் கிடைத்துவிடாது என்று தமிழ் நாடு ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ள கருத்துக்கு அமைச்சர்கள் பொன்முடி, மா. சுப்பிரமணியன் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் பொன்முடி, முதலமைச்சர் இரண்டு ஆண்டுகளில் ஆரம்ப கல்வி வளர்சிக்காக பல்வேறு திட்டங்களை கொண்டு வந்து செயல்படுத்தி வருகிறார். உயர் கல்வி துறையில் படிக்க மாணவர்கள் திறனை வளர்க்க நான் முதல்வன் திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார். 'நான் முதல்வர்' திட்டத்தை சிங்கப்பூர் கல்வி அமைச்சரே பாராட்டியுள்ளார். தமிழகத்தில் கல்வி தரத்தில் வளர வேண்டும் என்பதற்காக நடவடிக்கை எடுத்துள்ளார். பத்திரிகையையாவது ஆளுநர் படிக்க வேண்டும். அரசியல்வாதி போன்றும் எதிர்கட்சி போன்றும் பேசுவது வருந்ததக்கது - என்றார்.

இதேசமயம், சென்னையில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் மா. சுப்பிரமணியன்,

தமிழ்நாட்டின் வளர்ச்சியில் அக்கறை இல்லாதவர்கள் தான், முதலமைச்சரின் வெளிநாட்டு பயணத்தை விமர்சிப்பார்கள். இது நம்முடைய தமிழ்நாட்டு ஆளுநராக உள்ள ஆர். என். ரவிக்கும் பொருந்தும் என்று கூறினார். (ஐ)

# உலக தமிழராய்ச்சி மாநாடு ஜுலை 7இல் சென்னையில்

சென்னை, ஜூன் 07

சென்னையில் 11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஜூலை 7ஆம் திகதி தொடங்கி 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

இதில் 200இற்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் பங்கேற்கின்றனர். இது தொடர்பாக உலக தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவர் மு. பொன்னவைக்கோ, துணைத் தலைவர் இ.சுந்தரமூர்த்தி, மாநாடு ஏற்பாட்டுக் குழு தலைவர் ஜி. ஜோன் சாமுவேல், பொதுச் செயலாளர் உலகநாயகி பழனி ஆகியோர் சென்னை பல்கலைக்கழகத்தில் நிருபர்களிடம் கூறியவையாவன,

உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் சார்பில் இதுவரை 10 மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. 11ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு ஜூலை 7 முதல் 9ஆம் திகதி வரை சென்னை அடுத்த செம்மஞ்சேரியில் உள்ள ஆசியவியல் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. மாநாட்டை தொடங்கி வைக்க முதலமைச்சர் மு. க. ஸ்டாலினிடம் அனுமதி கேட்டுள்ளோம். ஒப்புதல் கிடைக்கும் என நம்புகிறோம்.

உலகமெல்லாம் தமிழோசை பரவ வேண்டும் என்பது இந்த மாநாட்டின் மையப் பொருள். தமிழ்மொழி, இலக்கியம், தமிழர் பண்பாடு, கலாசாரம், நாகரிகம் ஆகியவை குறித்து இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இதில், இந்தியாவில் இருந்து மட்டுமின்றி ஜப்பான், தென் கொரியா, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் இருந்தும் 200இற்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், மொழி பெயர்ப்பாளர்கள், அகழ்வாராய்ச்சி நிபுணர்கள் பங்கேற்கின்றனர். தமிழின் தொன்மை, தமிழ் பண்பாடு, தமிழ் இலக்கியம், தொல்லியல், கல்வெட்டியல், மானுடவியல், சமூகவியல், மொழி பெயர்ப்பியல், மொழியியல் என பல்வேறு தலைப்புகளில் வல்லுநர்கள் உரையாற்ற உள்ளனர். மொத்தம் 200 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. மாநாட்டில் புத்தக கண்காட்சி, நூல் வெளியீட்டு நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவையும் நடைபெறவுள்ளன. (ஐ)

# தமிழ் கலாசார உணர்வுக்கு எதிராக ஆளுநர் ரவி செயல்படுகின்றார்

## காங்கிரஸ் குற்றச்சாட்டு

சென்னை, ஜூன் 07

தமிழக ஆளுநர் தமிழ் கலாசார உணர்வுகளுக்கு எதிராக தொடர்ந்து பேசி வருகிறார். அவ்வப்போது அவருடைய எல்லை மீறிய பேச்சுக்கு அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்து வந்தாலும் தொடர்ந்து அவர் பேசி வருகிறார் - இவ்வாறு தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

இப்போது அந்நிய மூலதனம் நேரடியாக போய் கேட்பதால் வராது என்ற ஒரு கருத்தை வெளியிட்டு தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளிநாடுகளுக்குச் சென்று தமிழகத்தின் வளர்ச்சிக்காக அந்நிய மூலதனங்களை ஈர்த்து வந்ததை குறை கூறியிருக்கிறார். இதையும்

தமிழகத்தில் கல்வி சரியில்லை. கட்டமைப்புகள் சரியில்லை. அதனால் அந்நிய மூலதனங்கள் வராது என்றெல்லாம் கூறியிருக்கிறார். உத்தரப்பிரதேசத்துக்கு செல்லாத முதலீடுகள் தமிழகத்துக்கு வருகிறது. ஏன் தொழில் நுட்பமும் மூலதனமும் இருப்பவர்கள் எங்கே மனித வளம் அதிகமாக இருக்கிறதோ அங்கேதான் முதலீடு செய்வார்கள் மனித வளம் நிறைந்த தமிழகத்தில் முதலீடுகளை ஈர்க்கும் பணிகளை தமிழக அரசு மேற்கொண்டுள்ளது.

மோடி வந்த பிறகுதான் நாட்டில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது என்று கூறுகிறார். உண்மையில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. நரசிம்மராவ், மன்மோகன் சிங், சிதம்பரம் ஆகியோர் காலத்தில் தான். இப்போது தொழில் வளர்ச்சி 9 சதவீதத்தில் இருந்து 7 சதவீதமாக குறைந்துள்ளது - என்றார். (ஐ)

# கருணாநிதி நூற்றாண்டுவிழா; தொடக்கவிழா இன்று ஆரம்பம்

சென்னை, ஜூன் 07

ஒடிசா ரயில் விபத்து காரணமாக தள்ளி வைக்கப்பட்டிருந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நூற்றாண்டு தொடக்க விழா பொதுக்கூட்டம் சென்னையில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது.

கருணாநிதியின் நூற்றாண்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. அன்றைய தினம் மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் பங்கேற்கும் பொதுக்கூட்டம் வடசென்னையில் நடைபெற இருந்தது. ஒடிசா ரயில் விபத்தைத் தொடர்ந்து இந்த பொதுக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில், இப்பொதுக் கூட்டம் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கருணாநிதியின் நூற்றாண்டு விழா தொடக்கம் என்பதால், ஆண்டு முழுவதும் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

# ஜனாதிபதி நீதிமன்றுக்கு மறைமுகமாக அழுத்தம்!

**முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு**

கொழும்பு, ஜூன் 07

**உயர் நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரணையில் உள்ள நிலையில், ஜனாதிபதி, சட்டத்தரணிகள் மாநாட்டில் கலந்துகொண்டு தேர்தலை நடத்துவதால் பயனில்லை, மக்கள் வாக்களிக்க வர மாட்டார்கள் எனக் கூறியிருப்பது, வழக்கு விசாரணைக்கு கொடுக்கப்பட்டுள்ள மறைமுக அழுத்தம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஒரு புறம் நீதித்துறையை சுயாதீனமாக மாற்றவேண்டும் எனக்கூறிக்கொண்டு நாட்டின் நீதிமன்ற விவகாரங்களில் தலையீடு செய்வது சிக்கலுக்குரியது.

சட்டத்தரணிகள் மாநாட்டில் கலந்துக்கொண்ட ஜனாதிபதி நீதிமன்றத்திற்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் சில விடயங்களை பேசினார். தேர்தல் சம்பந்தமாக ஜனாதிபதி கருத்து வெளியிட்டார். ஜனாதிபதி கருத்து தொடர்பில் எமக்கு சிக்கல் இல்லை. ஆனால் நீதிபதிகள் கலந்துக்கொண்ட நிகழ்வில் அதனை கூறியது நீதிமன்றத்திற்கு அழுத்தம் கொடுப்பதாக அமைந்துள்ளது.

குறைந்தபட்சம் உள்ளூராட்சிச் சபை தேர்தலை நடத்துங்கள். மக்கள் வாக்களிக்கின்றனரா இல்லையா என்று பார்க்கலாம்.

இதனைச் செய்யாது, நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி, அரசியலமைப்புச் சட்டத்திற்கு அமைய நடத்தவேண்டிய தேர்தலை நடத்தவிடாது அதனைச் சீர்குலைத்து, சுயாதீன ஆணைக்குழுக்களைச் செயலிழக்கச் செய்து, தேர்தலை நடத்தினால் மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் என்று ஜனாதிபதி கூறுகிறார்.

இது என்ன கேலிக்கதை. ஜனாதிபதியின் கருத்து பாரதூரமானது. தேர்தல்களை நடத்தாமல் இருக்கவே முயற்சிப்பதாக தோன்றுகிறது.

தான் எண்ணும் நேரத்தில் தேர்தலை நடத்தும் தேவையே ஜனாதிபதிக்கு இருக்கின்றது. நாட்டின் அரசியலமைப்பு, ஆணைக்குழுக்கள் மற்றும் நீதித்துறை எதுவும் அவருக்கு அவசியமில்லை.

அமைச்சரவை அவசியமில்லை என ஜனாதிபதி ஒரு முறை கூறியிருந்தார். செயலாளர்களுடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுத்து நாட்டை முன்னெடுத்துச் செல்லாம் எனக் கூறியிருந்தார்.

தற்போது தேர்தல் அவசியமில்லை என்று கூறுகிறார். அப்படியானால் பாராளுமன்றமும் அவசியமில்லை. சர்வாதிகாரத்தை நோக்கி பயணிக்கின்றனர்.

தேர்தல்கள் நடத்தப்படாது என்ற அடையாளங்கள் தென்பட ஆரம்பித்துள்ளன. இது மிகவும் பாரதூரமான நிலைமை -என்றார். (அ)

# வடமாகாண ஆளுநரை சந்தித்து இந்திய துணைத் தூதுவர் பேச்சு



யாழ்ப்பாணம், ஜூன் 07

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வடமாகாணத்தின் ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த வாரம் குறித்த சந்திப்பு நடைபெற்றதாக இந்திய துணைத் தூதரகம் ருவிட்டர் பதிவொன்றில் தெரிவித்துள்ளது.

இச்சந்திப்பின்போது, வடக்கில் இந்திய அபிவிருத்தித் திட்டங்களின் நிலை மற்றும் பல்வேறு துறைகளில் இந்தியாவுக்கும் இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிக்கப்பட்டதாக அந்த பதிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த சந்திப்பில் வடமாகாண ஆளுநருக்கு இந்திய துணைத் தூதர் இந்திய நூல்கள் சிலவற்றையும் அன்பளிப்பு செய்தார். (அ)

# அஜான் பிரம்மவன்ஸ தேரரிடம் மன்னிப்பு கோரினார் நிமால்!

கொழும்பு, ஜூன் 07

அஜான் பிரம்மவன்ஸ தேரர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் எதிர்நோக்கி நேரிட்ட சிரமங்களுக்காக அவரிடம் மன்னிப்பு கோருவதாக விமான சேவைகள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எனது பொறுப்பின் கீழ் இருக்கும் நிறுவனம் ஒன்றில் ஏதேனும் தவறு நடந்திருந்தால், அதனை ஏற்றுக்கொண்டு எதிர்காலத்தில் அவ்வாறான தவறு நடக்காமல் பார்த்துக்கொள்வது பெறுப்பு.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

விசாரணைகளை நடத்தும் பொறுப்பு இலங்கை விமான சேவைகள் அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விசாரணைகளில் யார் தவறு செய்தனர் என்பதை கண்டறிய முடியும். இப்படியான எதிர்காலத்தில் நடக்காத வகையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை நாட்டில் தற்போது எங்காது ஒரு சம்பவம் நடந்தால், ஊடகங்கள் அதற்கு அரசியல் சாயம் பூசுகின்றன.

பிரதமர் வேறு முனையத்தின் ஊடாகச் சென்றார். அவர் அந்தப் பக்கம் வரவில்லை. நான் வேறு ஒரு முனையத்தில் இருந்தேன்.

முதலில் பிரதமருக்கு சேறு பூசினர். பின்னர் எனக்கு எதிராக சேறு பூசினர். இதன் காரணமாக ஊடக கண்காணிப்புச் சட்டம் நாட்டுக்கு தேவைப்படுகிறது.

ஊடகங்கள் தவறாக நடந்துக் கொள்ளும்போது எப்படி வேலைகளை செய்வது. எமது தறுகளை சுட்டிக்காட்டுங்கள்.

செய்திகளை உருவாக்காதீர்கள். உள்ள செய்தியை உள்ளபடி வெளியிடுங்கள்.

இந்த சம்பவத்தில் சில ஊடகங்கள் பொறுப்பின்றி நடந்துக் கொண்டன.

நாட்டுக்கு ஏற்பட்ட அவப் பெயருக்கு ஊடகங்கள் பொறுப்புக்கூற வேண்டும்-என்றார். (அ)

# காணாமல் ஆக்கபட்டோருக்கு குறைந்தபட்ச நியாயம்கூட அரசால் வழங்கப்படவில்லை

**சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு**

கொழும்பு, ஜூன் 07

உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சம்பந்தமான ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள சட்டமூல வரைவின் ஊடாக இலங்கையின் இறுதிப் போரின்போது பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரியுள்ள குறைந்தபட்ச நீதியையோ, நியாயத்தையோ நிறைவேற்ற தவறியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சம்பந்தமாக அரசாங்கம் கொண்டு வரவுள்ள சட்டமூலம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இறுதிக்கட்டப் போரின்போது பாதுகாப்பு தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்ட தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என காணாமல் போனவர்களின் உறவினர்கள் இலங்கை அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளனர். அத்துடன் காணாமல் போனவர்களுக்காக அவர்கள் நியாயத்தை எதிர்பார்க்கின்றனர்.

யுத்தம் காரணமாக காணாமல்போனவர்களின் உறவினர்கள் 2 ஆயிரம் நாட்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அரசாங்கம் உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சம்பந்தமாக புதிய சட்டத்தை கொண்டு வர முயற்சித்தாலும் அது குறித்து கேட்டறிய வேண்டிய தரப்புடன் இதுவரை கலந்துரையாடவில்லை.

உண்மையைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பாக அரசாங்கம் உருவாக்கியுள்ள சட்டமூல வரைவு குறித்து என்னிடம் கருத்து கேட்கப்பட்டது. எனினும் அதில் பொறுப்புக்கூறல் பற்றிய எந்த விடயங்களும் இல்லை.

கடந்த பல வருடங்களாக 15 ஆணைக்குழுக்களின் முன்னிலையில் போர் காரணமாக பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சாட்சியங்களை வழங்கியுள்ளனர்.

அந்த சாட்சியங்களின் அடிப்படையில் காணாமல் போனவர்கள் சம்பந்தமான செயலகம் விசாரணைகளை நடத்தியது.

இந்த ஆணைக்குழுக்களின் நடவடிக்கைகளில் எந்த முன்னேற்றத்தையும் காணக் கிடைக்கவில்லை.

பரணகம ஆணைக்குழுவின் முன் சாட்சியமளித்தவர்களை மீண்டும் மீண்டும் ஆணைக்குழுவிற்கு அழைப்பது மாத்திரமே நடந்தது-என்றார். (அ)

# பெண்களுக்கான ஆணைக்குழு அமைக்க விசேட குழு நியமனம்

கொழும்பு, ஜூன் 07

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் மற்றும் பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு விசேட குழு ஒன்று மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளரின் தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில், வசந்தா செனவிரத்ன, றோஸ் விஜேசேகர, ரமணி ஜயசுந்தர, விஜய ஜயதிலக்க, விசேட வைத்திய நிபுணர் லக்ஷ்மன் சேனாநாயக்க மற்றும் உதேனி தெவரப்பெரும ஆகியோர் அடங்குகின்றனர்.

பாலின சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டல் மற்றும் பெண்களுக்கான தேசிய ஆணைக்குழுவொன்றை அமைப்பது தொடர்பான சட்ட மூலத்தின் முன்னேற்றம் குறித்து சம்பந்தப்பட்ட பங்குதாரருடன் இணைந்து பாராளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தில் மீளாய்வு செய்யப்பட்டது.

ஒன்றியம் அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பர்னாந்துபுல்லே தலைமையில் பாராளுமன்றத்தில் அண்மையில் கூடியபோது ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியம் பிரதிநிதியால் சட்ட மூலம் தொடர்பில் முன்வைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இந்த சட்ட மூலங்கள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு நிபுணர்கள் குழுவொன்றை அமைக்குமாறு ஒன்றியத்தின் தலைவர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பது பொருத்தமற்றது!

## கூறுகிறார் ரோஹித அபேகுணவர்தன

**கொழும்பு, ஜூன் 07**

**உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை தொடர்ந்தும் ஒத்திவைத்தால், பாதிப்புகளைச் சந்திக்க நேரிடும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை ஒத்திவைப்பது பொருத்தமற்றது.

இந்த சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சிச் சபை, மாகாண சபை தேர்தலை நடத்தவேண்டும். முடிந்தால் மாகாண சபைத் தேர்தலையும் நடத்தவேண்டும். அல்லது மாகாண சபை முறைமைய இரத்துச் செய்யவேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இல்லாத வெள்ளை யானைகளை வைத்திருப்பதில் பயனில்லை.

ஜனநாயகத்தை ஸ்தாபிக்கவும் காட்டுச் சட்டத்தை ஒழிக்கவும் நாட்டின் பொருளாதார



நிலைமை வலுப்படுத்துவற்காகவே பொதுஜன பெரமுனவின் 134 பாராளுமன்ற உறுப்பினர்களின் வாக்கில் ஜனாதிபதியை பதவிக்கு கொண்டு வந்தோம் -என்றார். (அ)

# ட்ரோன் பறக்க விட்ட இளைஞர் கைதானார்

கொழும்பு, ஜூன் 07

கொழும்பு பம்பலப்பிட்டி ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று முன் தினம் இரவு ட்ரோன் ஒன்றை அனுமதியின்றி பறக்க விட்ட பல்கலைக்கழக மாணவனை விமானப்படையினர் கைது செய்துள்ளனர்.

புத்தளம் நுரைச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் பயிலும் 22 வயதான மாணவனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த இளைஞன் ரயில் நிலையத்திற்கு அருகில் ட்ரோன் பறக்க விட்டுக்கொண்டிருந்த போது, பம்பலப்பிட்டி ஓஷன் டவரில் அமைந்துள்ள விமானப் படை காவலரணைச் சேர்ந்த படையினர், அவரை கைது செய்துள்ளனர்.

பம்பலப்பிட்டியில் உள்ள உணவகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் நிறைவடைந்ததை முன்னிட்டு அதனைக் கொண்டாடுவதற்காக ட்ரோனி வானில் பறக்கவிட்டதாக மாணவன், விசாரணைகளின்போது தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட மாணவன் ட்ரோனுடன் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். (அ)

# பல மில்லியன் ரூபா பெறுமதியுடைய காணி குறைந்த விலைக்கு விற்பனை

## எஸ்.எம்.மரிக்கார் சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 07

கண்டி ஹந்தானையில் 25 ஏக்கர் காணி ஒரு பேர்ச்சஸ் 33 ரூபா என்ற விலையில் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.மரிக்கார் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த காணியின் வர்த்தக மதிப்பு ஆயிரத்து 760 மில்லியன் ரூபா. எனினும் மிகக் குறைந்த விலையில் ஹோம் லேண்ட் என்ற தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த காணிகளை வழங்குவது சம்பந்தமான உடன்படிக்கை கடந்த 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இது தொடர்பான சகல ஆவணங்களும் என்னிடம் உள்ளன. இதன் பின்னணியில் இருப்பது யார் என்பதை தேடிப்பார்க்குமாறு கோருகிறேன்.

அரசியல்வாதிகள் தலையிட்டு ஹந்தானையில் மேலும் 10 ஏக்கர் காணியை பகிர்ந்துக் கொள்ள தயாராகி வருகின்றனர்.

காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்கு சொந்தமான கட்டான இம்புல் வாடிய பிரதேசத்தில் 25 ஏக்கர் காணியை பகிர்ந்துக் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரண்டு, மூன்று அமைச்சர்களுக்கு இந்த காணிகள் பகிரப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது-என்றார். (அ)

# இலங்கையில் தரம் குறைந்த பாண் உற்பத்தியாகின்றது!

## ஏற்றுக்கொண்டது வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு, ஜூன் 07

வெதுப்பகங்களின் அடுப்பு தொடர்பான பிரச்னைகள் காரணமாக தரம் குறைந்த பாண் உற்பத்தி செய்யப்படுவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் கூறியுள்ளது.

மேலும், இலங்கை ரூபாவின் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் மாவின் விலை குறைக்கப்பட்டமை பேக்கரிப் பொருட்களின் விலை குறைப்புக்கு பங்களிக்கும் எனச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு நகரில் பாண் வாங்கும் நுகர்வோர், பேக்கரிகள் தரம் குறைந்த பாணை உற்பத்தி செய்வதாகவும், அவை சரியாக வேகாமல் விரைவாக பழுதடைந்து விடுவதாகவும் முறைப்பாடு கூறியுள்ளனர்.

ஆனால் இது தொடர்பில் நுகர்வோரிடமிருந்து எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கப் பெறவில்லை என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

அதன்படி, “மா அல்லது பேக்கிங் பொருட்களில் எந்த விதத்திலும் தரம் குறைவாக இருக்கக் கூடாது. பாண் சரியாக வேகாமல் இருப்பதற்கான காரணம், பேக்கரிகளின் தவறுகள் அல்லது அடுப்பு தொடர்பான பிரச்னைகள் காரணமாக இருக்கலாம். மா தரம் குறைந்ததாக இருந்தாலும், பாண் மாவை போதுமான அளவு வேகவைக்கவேண்டும். அதன்படி, உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் பாண் தரமற்றது என்று தெரிந்தால், அத்தகைய பாண் அல்லது பேக்கரிப் பொருட்கள் உட்பட எந்தவொரு பொருட்களையும் விற்பனை செய்வது சட்டவிரோதமானது” அவர் கூறினார்.

இதேவேளை, கோழி இறைச்சியின் விலைகள் அதிகரித்துள்ளதால், பேக்கரிப் பொருட்களின் விலையை குறைப்பது குறித்து சங்கம் பரிசீலிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

எனவே இப்போதைக்கு பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறையாது என்பதையும் அவர் உறுதிப்படுத்தினார். (அ)

# டயனா கமகே வழக்கு தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 07

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேயின் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி வரை ஒத்திவைக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு தீர்ப்பு அறிவிப்பதற்காக நேற்று எடுத்துக்கொள்ளப் பட்டபோதே ஒத்திவைக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ.மரிக்கார் ஆகியோர் தீர்ப்பை ஜூலை 25 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தனர்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பிரித்தானிய பிரஜை என்பதால் இந்த நாட்டின் பாராளுமன்றத்தில் அமர அவர் தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறு கோரி சமூக ஆர்வலர் ஓசல ஹேரத் இந்த மனுவை சமர்ப்பித்தார். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள், டயமண்ட் கப்பல்கள் விபத்து; உண்மையைக் கண்டறிவதற்கு குழு நியமனம்!

கொழும்பு, ஜூன் 07

எக்ஸ்பிரஸ் பேர்ள் மற்றும் டயமண்ட கப்பல்கள் விபத்துக்குள்ளாமை தொடர்பில் உண்மைகளை ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்தக் குழுவின் தலைவராக அமைச்சர் ரமேஷ் பத்திரன செயற்படுவார்.

சுரேன் ராகவன், டயானா கமகே, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், ரவூப் ஹக்கீம், விஜித ஹேரத், சரத் வீரசேகர, நிரோஷன் பெரேரா, அஜித் மானப்பெரும, நிமல் லான்சா, துஷார இந்துனில், காவிந்த ஜயவர்தன, அகிலா எல்லாவல, நாலக பண்டார கோட்டேகொட, மதுர விதானகே ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

# இலங்கையின் பல பகுதிகளில் பாரதூரமான குற்றச்செயல்கள்

## ஏற்றுக்கொண்டுள்ளது அரசு

கொழும்பு, ஜூன் 07

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தற்போது மனிதப் படுகொலைகளும் பாரதூரமான குற்றச்செயல்களும் இடம்பெற்றுவருவதை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு, ஆளுங்கட்சி எம்.பியான சஞ்சீவ எதிரிமான்னவின் கேள்விக்குப் பதிலளித்தார்.

இதன்போதே, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தற்போது மனிதப் படுகொலைகளும் பாரதூரமான குற்றச்செயல்களும் இடம்பெற்றுவருவதை அவர் ஏற்றுக்கொண்டார்.

இந்த மனிதப் படுகொலைகள், பாதூரமான குற்றச் செயல்களை கட்டுப்படுத்த பொலிஸாரிடம் முறையான வேலைத்திட்டங்கள் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இக்குற்றச் செயல்களின் பின்னணியில் அநாவசியமான முறையிலான துப்பாக்கிப் பயன்பாடுகளும் உள்ளன. நாட்டில் சிவில் யுத்தமொன்று இருந்தபோது அநாவசியமான துப்பாக்கிப் பயன்பாடுகள் இருந்தன. ஆனால், இப்போதும் இது தொடர்வது ஏன்? சட்டவிரோதமான முறையில் ஏ.கே. 47 ஐ கூடப் பயன்படுத்துகிறார்கள்.

இது தொடர்பில் விசாரணைகள் ஏதுவும் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா எனவும் சஞ்சீவ எதிரிமான்ன இதன்போது கேள்வி எழுப்பினார்.

யுத்தம் நிறைவடைந்தப் பின்னர் தென் மாகாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட துப்பாக்கிகளே இலங்கையில் பல இடங்களில் அதிகளவில் உள்ளன எனப் பதிலளித்த அமைச்சர், இதற்கு மேலதிகமாக போதைப்பொருள்களை நாட்டுக்குள் கடத்தும் போது துப்பாக்கிளையும் கடல் வழியாக நாட்டுக்குள் கொண்டு வருகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

பண்டாரகமவில் 192 கிலோகிராம் போதைப்பொருளுடன் 10 பிஸ்டல்களும் கொண்டுவரப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், கடந்த 3 வருடங்களில் மாத்திரம் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் ஆயிரத்து 163 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இதில் ரி-56 மற்றும் 81 ரக துப்பாக்கிகளும் பிஸ்டல்களும் உள்ளடங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# அபராதத் தொகையை அதிகரித்த சுங்கப் பிரிவு

## தங்கக் கடத்தலை கட்டுப்படுத்த அதிரடி தீர்மானம்

கொழும்பு, ஜூன் 07

**நாட்டுக்குள் சட்டவிரோதமாக தங்கத்தைக் கடத்தி வருபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்க சுங்கப் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.**

இது தொடர்பில் சுங்கப் பிரிவு அதிகாரிகளிடையே அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தங்கக் கடத்தல்கள் தொடர்பில் சுங்கப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்-

நாட்டுக்குள் சட்டவிரோதமான பொருள்களை நபர் ஒருவர் எடுத்துவரும்போது, அந்த சட்டவிரோதப் பொருளின் பெறுமதியில் மூன்று மடங்கு அபராதமாக விதிக்கப்படும். குறைந்தபட்ச அபராதத் தொகை ஒரு இலட்ச ரூபாய்.

கிடைக்கப் பெறும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அதிகாரிகள் இந்த அபராதத் தொகையை தீர்மானிப்பார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், அண்மையில் தங்கத்தை கடத்த முயற்சி செய்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்தார். இச்சம்பவத்துக்குப் பின்னர் விசேட கூட்டமொன்றை சுங்கப் பிரிவினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் தங்கத்தைக் கடத்தி வரும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே, எதிர்காலத்தில் தங்கத்தைக் கடத்துபவர்களுக்கு அதிகபட்ச அபராதம் விதிக்க வேண்டுமென கலந்துரையாடியுள்ளனர்.

அவ்வாறு செய்தால் மாத்திரமே தங்கக் கடத்தல்களைக் கட்டுப்படுத்த முடியும் எனவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது-என்றார்.

அண்மையில் 8 கோடி ரூபாய்க்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த தங்கத்தை இலங்கைக்குள் சட்டவிரோதமாகக் கொண்டுவர முயற்சித்த பிரான்ஸ் பிரஜை ஒருவரை சுங்கப் பிரிவினர் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 35 வயதுடைய பிரான்ஸ் நாட்டவர் இதற்கு முன்னரும் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நிலையில், இம்முறை 24 மணித்தியாலங்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு வருவதை அவதானித்த அதிகாரிகள், அவரது பயணப் பொதிகளை பரிசோதித்துள்ளனர்.

பிரான்ஸின் பாரிஸில் இருந்து சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த பிரான்ஸ் பிரஜை, அவரது பொதியில் கண்டு பிடிக்க முடியாத வகையில் கறுப்பு வர்ணம் பூசி எடுத்து வந்த தங்கக் கட்டிகளை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தங்கக் கட்டிகளை கைப்பற்றிய அதிகாரிகள், அவருக்கு 7 கோடி ரூபாய் அபராதத்தை விதித்தனர்.

இந்த பிரான்ஸ் பிரஜை தண்டப்பணத்தைச் செலுத்த தவறிய நிலையில், சுங்க அதிகாரிகளால் நீர்கொழும்பு பதில் நீதவான் இந்திக டி சில்வா முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது பிரான்ஸ் பிரஜையை இம்மாதம் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அண்மையில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 08 கோடி ரூபா பெறுமதியான தங்கத்தை சட்டவிரோதமாக கொண்டு வந்தபோது, அதில் 10 வீதம் அதாவது 75 இலட்சம் ரூபாவை அபராதமாகச் செலுத்துமாறு சுங்க அதிகாரிகள் உத்தரவிட்ட நிலையில், சட்டவிரோதமாக சம மதிப்புள்ள தங்கத்தை கையிருப்பு கொண்டு வந்த பிரான்ஸ் நாட்டுக்காரர் ஒருவருக்கு, 07 கோடி ரூபாய் அபராதம் செலுத்த உத்தரவிடப்பட்டது.

(அ)



# பல வீதிகள் நீரில் மூழ்கியதால் பரீட்சார்த்திகள் அசௌகரியம்

கொழும்பு, ஜூன் 07

களுத்துறை மாவட்டத்தில் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதால் கல்வி பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் பெரும் அசௌகரிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.

களுத்துறை மாவட்டத்தில் வலல்லாவிட்ட மற்றும் புளத்சிங்கள ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள பரீட்சை நிலைகளுக்கு செல்லும் வீதிகளே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக கடமைகளில் ஈடுபட்டுள்ள பணிக்குழாமினருக்கும் தேவையான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், முதற்கட்டமாக போக்குவரத்து சிக்கல்களை சீர் செய்வதற்காக கடற்படையுடன் இணைந்து படகு சேவை மற்றும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த நிலையங்களுக்கான வினாத்தாள்கள், மாற்று வீதிகள் ஊடாக கொண்டு செல்ல அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நடவடிக்கைகளை மேற்கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அனர்த்த நிலைமைகளால் பரீட்சைக்கு தோற்ற இடையூறுகள் ஏற்பட்டால் அது குறித்து அறிவிக்க அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் 117 என அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறு மாணவர்களிடம் கோரப்பட்டுள்ளது.

(அ)

# கந்தகாடு இராணுவ பண்ணையில் கொன்று புதைக்கப்பட்டது யானை!

கொழும்பு, ஜூன் 07

திருகோணமடு வனப்பகுதியில் உள்ள கந்தகாடு இராணுவப் பண்ணையில் எட்டு அடி உயர யானையை கொன்று குழியில் புதைத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதனடிப்படையில் பொலனறுவை மற்றும் சோமாவதி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த யானையை மீட்பதற்காக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்றில் உண்மைகளை முன்வைத்து நீதிமன்ற உத்தரவு பெற்றுக் கொள்ளப்படும் என வனஜீவராசிகள் அதிகாரி தெரிவித்தார்.

புதைக்கப்பட்ட இந்த யானையின் உடல் பாகங்கள் வெளிப்பட்ட போது, பிரதேச மக்கள் சிலர் அதனை அவதானித்ததையடுத்து வனவிலங்கு அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

இது தொடர்பில் வனவிலங்கு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(அ)

# பருவப்பெயர்ச்சி மழையுடன் டெங்கு காய்ச்சல் அதிகரிக்கும்

கொழும்பு, ஜூன் 07

எதிர்வரும் பருவப்பெயர்ச்சி மழையுடன் டெங்கு காய்ச்சல் அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கு முன்னர் தமது சுற்றுப்புறச்சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு பொது மக்களை கேட்டுக்கொள் வதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் லஹிரு கொடிதுவக்கு தெரிவித்தார்.

இதேவேளை, எதிர்வரும் 14, 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நாட்டின் 12 மாவட்டங்கள் உள்ளடங்கும் வகையில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

# வெளிநாட்டு தூதர்களின் மலையகம் தொடர்பான புதிய அக்கறை எங்கள் முயற்சிகளின் பலாபலன்!

## சுட்டிக்காட்டுகிறார் மனோ கணேசன்

கொழும்பு, ஜூன் 07

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான், பிரான்ஸ், அவுஸ்திரேலியா ஆகிய நாட்டு தூதுவர்களுடனும், வேறு நாடுகளில் இருந்து இலங்கை வந்து போகும் ஐ.நா, உலக வங்கி உட்பட பன்னாட்டு நிறுவன மற்றும் அரச பிரதிநிதிகளுடனும் தமிழ் முற்போக்கு கூட்டணி தொடர்ச்சியாக நடத்தி வரும் கலந்துரையாடல்கள் மற்றும் அவர்களுக்கு எம்மால் வழங்கப்பட்டுள்ள எழுத்து மூலமான ஆவணங்கள் காரணமாக இலங்கை இந்திய வம்சாவளி மலையக தமிழர் தொடர்பான போதிய தெளிவு தற்போது இலங்கை தொடர்பான சர்வதேச சமூகத்துக்கு ஏற்பட்டு வருகின்றது என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இன்னமும் பலநாட்டு தூதுவர்களுடனும், பன்னாட்டு நிறுவனங்களுடனும் நாம் எதிர்வரும் வாரங்களில் பேச உள்ளோம் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் சுமார் 15 இலட்சம் மலையக தமிழரின் தேசிய அரசியல் அபிலாசைகள் மற்றும் அவர்கள் மத்தியிலான பெருந்தோட்ட பிரிவினரின் மிகவும் பின்தங்கிய வாழ்வாதார நிலைமைகள் தொடர்பான எமது தொடர்சியான வலியுறுத்தல்கள் இன்று பலனளிக்க ஆரம்பித்துள்ளன.

இது மகிழ்ச்சியை தரும் ஒரு வளர்ச்சி மைல்கல்லாகும்.

நம்மை ஆளும், ஆண்ட அரசாங்கங்கள் எம்மை மாற்றாந்தாய் பிள்ளைகளாக நடத்தும் போது, நாம் அயலவரை நாடி எமது நியாயமான எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ள முயல்வது மிகவும் இயல்பானதாகும். இதில் தவறில்லை. இருந்தால், அராங்கத்திடமே தவறு இருக்கிறது. இதுபற்றிய தெளிவு என்னிடம் நிறையவே இருக்கிறது. ஆகவே யாரும் இனவாதிகள் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை.

எந்தவொரு முயற்சியும் ஒரே இரவில் பலன் தரப்போவதில்லை. படிப்படியான இடைவிடாத முயற்சிகளின் பின்னரே பலன் கிடைக்கும் என்பது எமக்கு நன்கு தெரியும்.

எம்மை நோக்கிய இந்த சர்வதேச கவனத்தை எமது மக்களுக்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளாக மாற்ற நாம் நன்கு திட்டமிட்டுள்ளோம்.

அதன் விவரங்களை அடுத்து வரும் நாட்களில் நாடு அறிந்து கொள்ளும் என கூட்டணி தலைவர் என்ற முறையில் இப்போதே கூறி வைக்கிறேன்.

நாம் சர்வதேச அரசுமுறை பிரதிநிதிகள், தூதுவர்கள் ஆகியோருடனும் மற்றும் யு.எஸ் எய்ட், உலக வங்கி உட்பட்ட இலங்கையின் அபிவிருத்தி பங்காளி நிறுவனங்களுடனும் பேசுகிறோம்.

“இலங்கைக்கு நீங்கள் தரும் நன்கொடைகள், உதவிகள், கடன்கள் இலங்கையில் மிகவும் பின்தங்கிய எமது மக்கள் பிரிவினருக்கும் கிடைப்பதை உறுதி செய்யுங்கள்” என நாம் வலியுறுத்துகிறோம்.

இன்று அரசு முன்னெடுக்கவுள்ள “அஸ்வெசும-ஆறுதல்” என்ற நாளாந்த பிரிவினருக்கான கொடுப்பனவுகள் தொடர்பிலும் நாம் எடுத்த முன்நகர் நடவடிக்கை இன்று உலக வங்கியினதும், அரசாங்கத்தினதும், சர்வதேச சமூகத்தினதும் கவனத்தை பெற்றுள்ளது. “அஸ்வெசும-ஆறுதல்” திட்டம் தொடர்பாக, உலக வங்கியுடனான எமது அடுத்த கட்ட காத்திரமான பேச்சுகள் அடுத்து வரும் சில நாட்களில் நடைபெறும்.

நாம் அரசில் அங்கம் வகிக்கும் போதும் கணிசமாக பணி செய்தோம். இன்று அரசில் அங்கம் வகிக்கவில்லை என்பதற்காக, நாம் அங்கம் வகிக்கும் எமது அரசு மீண்டும் உருவாகும் வரை சும்மாவே இருக்கவும் மாட்டோம். - என்றார். (அ)

# அபாய கட்டத்தை நோக்கி உயரும் புவி வெப்பநிலை! தாங்குமா தமிழ்நாடு?

அடுத்த சில ஆண்டுகளில் ஏற்கெனவே அதிக வெப்பத்தால் தகித்துக்கொண்டிருக்கும் பூமி, முதல்முறையாக ஒரு முக்கிய வெப்பநிலை வரம்பைக் கடக்கக்கூடும் என்று காலநிலை விஞ்ஞானிகள் கணித்துள்ளனர்.

இப்போதிருந்து 2027ஆம் ஆண்டுக்குள், தற்போது நிலவும் பூமியின் சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்ஷியஸுக்கு மேல் உயர 66 வீத வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மேலும், வெப்பநிலை வேகமாக அதிகரிக்கும்போது பனிப்பாறைகள் உருகுவதும் வேகமெடுப்பதால், சென்னையின் கடல் மட்டமும் வேகமாக உயரக்கூடிய அபாயம் உள்ளதாக அண்ணா பல்கலைக்கழக நிலவியல் பேராசிரியர் இளங்கோ எச்சரிக்கிறார்.

இதனால், தமிழ்நாட்டின் நிலப்பகுதிகளில் கடுமையான வெப்ப அலைகள் வீசக்கூடும், மாதக்கணக்கில் மழை கொட்டித் தீர்க்கலாம், வறட்சி ஏற்படுவதோடு பொருளாதார இழப்புகளும் இருக்கலாம் என்று வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

புவியின் சராசரி வெப்பநிலை அளவை, தொழிற்புரட்சிக்கு முந்தைய அளவைவிட 1.5 டிகிரி செல்ஷியஸ் அளவுக்கு உயரவிடாமல் தடுப்பதற்காக பாரிஸ் உடன்



படிக்கையில் உலக நாடுகள் கையெழுத்திட்டன.

ஆனாலும், தற்போது அந்த அளவை எட்டும் நிலையில் பூமி உள்ளது. இது நிகழ்ந்தால், 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் இருந்த புவி வெப்பநிலையைவிட 1.5 டிகிரி செல்சியஸ் அதிகமான வெப்பநிலையை பூமி அடையக்கூடும்.

மனித நடவடிக்கைகளால் வெளியேற்றப்படும் பசுமை இல்ல வாயு உமிழ்வுகள், எல் நினோ போன்ற காலநிலை மாறுபாடுகள் காரணமாக இதற்கான வாய்ப்புகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

அடுத்த ஒருசில ஆண்டுகளில் வெப்பநிலை வரம்பை பூமி கடக்கக்கூடும் என்ற எச்சரிக்கை தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுக்கொண்டே இருக்கும் நிலையிலும்கூட, வெப்பநிலை அதிகரிப்பு என்பது துரிதமாகி வருகி



றதே தவிர குறைந்தபாடில்லை.

பத்து அல்லது 20 ஆண்டுகளில் தொடர்ச்சியாக ஒவ்வோர் ஆண்டும் 1.5 சி என்ற அளவைக் கடப்பது என்பது வெப்பமயமாதல் தொடர்பான கடும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். நீண்ட வெப்ப அலைகள், அதிதீவிர புயல்கள், காட்டுத்தீ ஆகிய பாதிப்புகள் அதிகரிக்கக்கூடும்.

அதேநேரத்தில், அடுத்த சில ஆண்டுகளில் ஒருமுறை இந்த வெப்பநிலை வரம்பைத் தாண்டுவது என்பது பாரீஸ் வரம்பை மீறுவதாக அர்த்தப்படாது. உமிழ்வை கடுமையாகக் குறைப்பதன் மூலம் புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்த இன்னும் கால அவகாசம் இருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

2020ஆம் ஆண்டு முதல் உலக வானிலை அமைப்பு, பூமி 1.5 சி என்ற வரம்பை கடப்பதற்கான வாய்ப்புகள் எந்த ஆண்டில் அதிகமாக உள்ளது என்று மதிப்பிட்டு வருகிறது.

ஆனால், இதற்கான வாய்ப்பு 20 சதவீதம் மட்டுமே இருப்பதாக அப்போது அவர்கள் கணித்திருந்தனர். கடந்த ஆண்டு அந்த விகிதாச்சாரம் 50 சதவீதமாக அதிகரித்தது. தற்போது இது 66 சதவீதமாக உயர்ந்துள்ளது.

**1.5 செல்சியஸ் அளவை தாண்டினால் என்ன ஆகும்?**


இது உலகின் வெப்பநிலையின் நேரடி அளவீடு அல்ல. ஆனால் நீண்ட கால உலகளாவிய சராசரியுடன் ஒப்பிடும்போது பூமி எந்தளவு அதிகமாகவோ, குறைவாகவோ வெப்பமடைந்துள்ளது அல்லது குளிர்ந்துள்ளது என்பதை அறிந்துகொள்ள உதவுகிறது.

1850-1900 வரையிலான சராசரி புவி வெப்பநிலை தொடர்பான தரவுகளைக் கொண்டு நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு ஆகியவற்றைச் சார்ந்திருப்பதற்கு முன்பாக பூமி எந்தளவு வெப்பமாக இருந்தது என்பதை விஞ்ஞானிகள் அளவிடுகின்றனர்.

பூமியின் சராசரி வெப்பநிலை 2 சி-ஐ கடந்தால் கடுமையான பாதிப்புகள் ஏற்படும் என்று பல ஆண்டுகளாகவே விஞ்ஞானிகள் நம்பி வந்தனர். இந்நிலையில், 1.5 சி-ஐ கடந்தாலே அது பூமிக்கு ஆபத்தாக அமையும் என்று 2018ஆம் ஆண்டு அவர்கள் திருத்தம் செய்தனர்.

கடந்த சில பத்து ஆண்டுகளாகவே பூமியின் வெப்பநிலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதுவரை இல்லாத அளவாக 2016ஆம் ஆண்டு புவி வெப்பநிலை தொழிற்புரட்சிக்கு முந்தைய கணக்குகளுடன் ஒப்பிடும்போது 1.28 சி அதிகமாகப் பதிவாகியிருந்தது.

2016ஆம் ஆண்டுதான் வரலாற்றில் அதிக வெப்பமான ஆண்டாகப் பதிவானது. இந்நிலையில், இதுவரை பதிவானதிலேயே அதிக வெப்பநிலை பதிவான ஆண்டாக அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஏதாவது ஓர் ஆண்டு இருப்பதற்கான வாய்ப்பு 93 வீதம் உள்ளதாகவும் உலக வானிலை அமைப்பு கணித்துள்ளது.



தற்போதைய காலத்துக்கும் 2027க்கும் இடைப்பட்ட காலத்தில் முதன்முறையாக 1.5 சி என்ற உச்ச வரம்பை மீறுவதற்கு வலுவான வாய்ப்புகள் இருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

"நாம் இப்போது வருடாந்திர சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்ஷியஸின் தற்காலிக மீறலை எட்டியுள்ளோம். மேலும் மனித வரலாற்றில் நாம் சராசரி வெப்பநிலைக்கு மிகவும் நெருக்கமாக இருப்பது இதுவே முதல் முறை," என்று வானிலை அலுவலகத்தின் நீண்ட தூர முன்னறிவிப்புகளின் தலைவர் பேராசிரியர் ஆடம் ஸ்கேஃப் கூறினார். உலகெங்கிலும் உள்ள வானிலை மற்றும் காலநிலை ஏஜென்சிகளின் தரவை இவர் தொகுத்துள்ளார்.

இதுகுறித்து தமிழகத்தில் இயங்கும் தன்னார்வ அமைப்பான "பூவுலகின் நண்பர்கள்" அமைப்பைச் சேர்ந்த சுந்தர்ராஜன் பேசுகையில், "தொழில் புரட்சி" ஆரம்பித்த 1800 காலகட்டங்களுக்குப் பிறகு புதைப்படிமங்களை எரிப்பது அதிகரித்தது.



இதனால் ஏற்பட்ட உமிழ்வுகள் வளிமண்டலத்தில் அதிகளவில் சேரத் தொடங்கியதால் பூமி சூரிய வெப்பத்தைத் தக்க வைக்கத் தொடங்கியது. இதனால் புவியின் வெப்பம் அதிகரிக்கத் தொடங்கியது.

தொழிற்புரட்சி தொடங்கியபோது புவியின் வெப்பம் 14 டிகிரி செல்சியலாக இருந்தது. இது 1.5 டிகிரி செல்சியஸ் என்ற சராசரியைவிட அதிகரிக்கும்போது அதிக பாதிப்புகள் ஏற்படும் என்று பாரீஸ் ஒப்பந்தம் கூறுகிறது.

இந்நிலையில்தான், "2027க்குள் ஏதோவோர் ஆண்டில் இந்த சராசரி வெப்பநிலை 1.5 டிகிரி செல்சியஸ் உச்ச வரம்பைத் தாண்ட வாய்ப்புள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்," என்றார்.

**எல் நினோ என்றால் என்ன?**

அண்ணா பல்கலைக்கழக நிலவியல் பேராசிரியரான ல.இளங்கோ நம்மிடம் பேசுகையில், "எல் நினோவும் லா நினோவும் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை மாறி மாறி நிகழும். கடல் பரப்பின் வெப்பநிலை அதிகரிப்பதையே நாம் எல் நினோ என்கிறோம்.

எல் நினோவால் கடல் மட்டத்தில் வெப்பநிலை அதிகரிப்பதோடு நிலத்திலும் வெப்ப நிலை அதிகரிக்கக்கூடும். இதன் காரணமாக நீர் நிலைகள் வறண்டு போவது, நிலத்தடி நீர்மட்டம் குறைவது போன்ற பாதிப்புகள் ஏற்படும். மணல் பரப்பில் இருக்கும் நீர் வறண்டு போகும்.

எனவே, மழை பெய்தால், நீர்நிலைகள், மணல் பரப்பு போன்றவற்றில் ஏற்பட்ட பற்றாக்குறையைப் பூர்த்தி செய்த பின்னரே, நிலத்தினுள் செல்லும். இதனால், நிலத்தினுள் செல்லும் தண்ணீரின் அளவு குறையக்கூடும்.

இதேபோல், "கடலோரத்தில் இருக்கும் சென்னையில் ஆண்டுக்கு 1.5 முதல் 3 மில்லிமீட்டர் வரை கடல் மட்டம் உயர்கிறது. வெப்பநிலை வேகமாக அதிகரிக்கும் போது, பனிப்பாறைகள் வேகமாக உருகி கடல் மட்டமும் வேகமாக உயரக்கூடிய ஆபத்து உள்ளது" என்றார்.

சுந்தர்ராஜன் பேசும்போது, 'வெப்பநிலை குறையும் நிலையை லா நினோ என்றும் வெப்ப நிலை அதிகரிக்கும் நிலையை எல் நினோ என்றும் அழைக்கிறோம்.

கடந்த மூன்று ஆண்டுகளாக லா நினோ நிலவிய நிலையில், இந்த ஆண்டு இறுதியில் இருந்து எல் நினோ மாற்றம் ஏற்படவுள்ளது. பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள பகுதிகளில் அதிகமான வெப்பம் ஏற்பட்டால், அதனால் கடும் பாதிப்புகள் ஏற்படும்.

வெப்பநிலை உயர்வை லா நினோ மறைத்து வைத்திருந்தது. உண்மையான வெப்பம் எல் நினோ வரும்போதுதான் நமக்குத் தெரியும்" என்றார்.

# குறிப்பிட்ட சிலரை தெரிவுசெய்து இலக்குவைப்பது சட்டத்தின் நோக்கமாக இருக்கமுடியாது



கலாநிதி ஜெகான் பெரேரா

அமெரிக்காவில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் வெளிக்கிளம்புவது மாற்றம் நிரந்தரமானதல்ல என்பதை நினைவூட்டுகிறது. பொருளாதார இடர்பாடுகளின் விளைவான அமெரிக்க வெள்ளையர் சனத்தொகையின் மனக்குறைகளை ட்ரம்ப தனக்கு சாதகமாக பயன்படுத்துகின்றார். சமுதாயத்தில் தங்களின் இருப்புநிலையை அவர்கள் பேணிக்காப்பதற்கு ஐக்கியப்படவேண்டியது அவசியம் என்று அவர் வாதம் செய்கிறார். அவர்களுக்காக குரல்கொடுப்பவராக தன்னை ட்ரம்ப் முன்னிலைப்படுத்துகிறார்.

நிலையான விழிப்புணர்வே சுதந்திரத்துக்காக செலுத்துகின்ற விலையாகும் (**Eternal vigilance is the price of liberty**) என்ற சொற்றொடர் 1970 ஆம் ஆண்டில் ஐரிஷ் பேச்சாளர் ஜோன் பில்பொட்குறானின் கூற்று ஒன்றிலேயே அதன் தோற்றுவாயைக் கொண்டிருந்தது என்று டென்னிங் பிரபு தனது நீதிக்கான பாதை ( வுாந சுழயன வழ துரளவஉைந ) (1988) என்ற நூலில் கூறியிருக்கின்ற போதிலும் அதை அமெரிக்காவின் தாபகர்களான தோமஸ் ஜெபர்சன் தோமஸ் பெய்ன் மற்றும் ஆபிரகாம் லிங்கன் ஆகியோரிடமிருந்து வெளிப்பட்டதாக அனேகமாக கூறப்படுகிறது. எமது உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கு நாம் விழிப்பாக இருக்கவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்கு இந்த சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது.

உலகம் பூராவும் மக்களை அணிதிரட்டுவதற்கு பயன்படுத்தக்கூடிய சக்திமிகு இரு கோட்பாடுகளாக இன அடையாளமும் மத அடையாளமும் விளங்குகின்றன. இந்த நிலைமை அல்லது தோற்றப்பாடு பல நூற்றாண்டு கால மதசார்பற்ற நடைமுறைகள் காரணமாக மேற்கு ஐரோப்பாவில் தணிந்துவிட்டது போல தோன்றியது. அந்த மதசார்பற்ற நடைமுறைகளில் இனங்களுக்கும மதங்களுக்கும் இடையில் அரசு மதரசார்பற்றதாகவும் நடுநிலையானதாகவும் செயற்படவைக்கப்பட்டது.

கடந்த வருடத்தைய அறகலய மக்கள் கிளர்ச்சியின்போது ஒரு குறுகிய காலத்துக்கு எமது சனத்தொகையில் பெருமளவு பிரிவினரை வறுமைக்குள் தள்ளிய எதிர்பாராத பொருளாதார பேரிடருக்கு மத்தியில் இலங்கை அதன் இன, மத பிளவுகளைக் கடந்துநின்றதாக தோன்றியது. நாட்டை அவலநிலைக்கு கொண்டுவந்த அரசாங்கம் பதவியில் இருந்து விலகவேண்டும் என்று கோரி வீதிகளில் இறங்கிப்போராடிய மக்கள் மத்தியில் முன்னென்றும் இல்லாத ஐக்கியம் காணப்பட்டது. மக்கள் சக்தியின் வல்லமை அந்த அரசாங்கத்தின் தலைவர்களை அதிகாரத்தில் இருந்து விரட்டுதில் வெற்றிகண்டது. மக்கள் மத்தியில் குறிப்பாக இளைய சந்ததியினர் மத்தியில் ஐக்கியத்தையும் பரஸ்பர மதிப்பையும் கொண்டுவரக்கூடிய அரசாங்கம் ஒன்று எதிர்காலத்தில் தோன்றும் என்று நம்பிக்கை பிறந்தது.

ஆனால், ஊக்கமும் உறுதியும் கொண்ட டொனால்ட் ட்ரம்பைப் போன்று பழைய ஒழுங்கு மீண்டும் அரங்கிற்று வருவதற்கு மல்லுக்கட்டுகிறது. இனமும் மதமும் ஆபத்துகுள்ளாகின்றன என்ற பேச்சுக்கள் மீண்டும் வெளிக்கிளம்புகின்றன. தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழ்கின்ற மாகாணங்கள் உட்ட சகல மாகாணங்களிலும் அதிகாரப் பரவலாக்கத்தை மக்கள் அனுபவிக்கக்கூடியதாக அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதாக கடந்த வருடம் உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்த உறுதிமொழி தொடர்பில் இப்போது மௌனம் சாதிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஜனாதிபதியினால் புதிய பொருளாதார நோக்கு ஒன்றுக்கு வழிகாட்டப்படுகின்ற பழைய ஒழுங்கு இன -- மத விவகாரங்களில் விட்டுக் கொடுக்கத்தயாரில்லாததாக இருக்கிறது. அதன் விளைவாக போர்க்கால மனித உரிமைகள் பிரச்னைகளைக் கையாள்வதற்கு 2015 ஆம் ஆண்டில் சர்வதேச சமூகத்துக்கு உறுதியளித்த தன் பிரகாரம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அமைப்பதற்கான அரசாங்கத்தின் துணிச்சலான திட்டம் நெருக்கடியை எதிர்நோக்குகிறது. மெய்யான அதிகாரப்பரவலாக்கம் இல்லாத நிலையில் அத்தகைய பொறிமுறை ஒன்றை நியாயப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ தயாரில்லை என்று பிரதான தமிழ்க்கட்சிகள் அறிவித்திருக்கின்றன.

## புண்படுத்தப்படும் உணர்வுகள்

பல்வகைமையும் பன்முகத்தன்மையும் கொண்ட இலங்கைத் தேசத்தை உருவகித்து நிற்கும் வேறுபட்ட சமூகங்களுக்கு இடையிலான முரண்நிலைத் தீர்வு முயற்சிகளின் முன்னோக்கிய நகர்வுக்கு குறுக்கே வந்து இனமும் மதமும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றன என்ற உணர்வு மீண்டும் அச்சுறுத்துகிறது. உணர்ச்சிக்குமுறல் நிறைந்த இன, மதப் புயலின் மத்தியில் எதிர்பாராத வகையில் இரு நபர்கள் இப்போது அகப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் நகைச்சுவை பேச்சாளர். மற்றவர் மதப் போதகர். இருவரும் சிங்கள பௌத்த பெரும்பான்மைச் சமூகத்தில் பலரின் உணர்வுகளைப் புண்படுத்தியிருக்கிறார்கள்.

இருவருமே தங்களது பேச்சுக்களை சிறியதொரு சபையினர் மத்தியிலேயே நிகழ்த்தினர். ஆனால் அந்த பேச்சுக்கள் சமூக ஊடகங்கள் ஊடாக பரந்துபட்ட அளவில் பெரியளவு சபையினரை இப்போது எட்டிவிட்டன. மதவெறுப்பையும் வன்முறையையும் கிளறிவிடுவதற்கு இந்தப் பேச்சுக்களை அவர்கள் நிகழ்த்தினார்களா என்பதே இப்போதுள்ள கேள்வி. இன, மத மற்றும் அரசியல் தரப்பினர் என்று சகல தரப்புகளில் இருந்தும் இருவரினதும் பேச்சுககளுக்கு பெருவாரியான கண்டனங்கள் குவிந்தவண்ணம் இருக்கிறது.

பௌத்த சனத்தொகையின் மத உணர்வுகளை புண்படுத்தியிருக்கக்கூடிய தங்களது பேச்சுக்களுக்காக நகைச்சுவை பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவும் போதகர் ஜெரோம் பெர்னாண்டோவும் மன்னிப்புக் கேட்டிருக்கிறார்கள். தங்களின் பேச்சுக்களின் விளைவான பாதிப்பையும் கோபத்தையும் உணர்ந்துகொண்டபோது அவர்கள் பதற்றத்தை தணிக்க முயற்சியை மேற்கொண்டார்கள். ஒரு இன - மத சமூகத்தின் உறுப்பினர்களினால் இன்னொரு இன - மத சமூகத்துக்கு எதிராக உணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய கருத்துக்கள் வெளியிடப்பட்டிருப்பது இதுதான் முதற்தடவை அல்ல.

தற்போதைய நிலைவரத்தை அனுகூலமாக எடுத்துக்கொண்டு அரசாங்கம் சமூக ஊடகங்களையும் பிரதான ஊடகங்களையும் கட்டுப்படுத்துவதற்கான அவசியம் குறித்து பேச ஆரம்பித்திருக்கிறது. ஒலிபரப்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான சட்டமூலம் ஒன்றை கொண்டுவருவதற்கு அரசாங்கம் தயாராகிறது. தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம் மற்றும் பொது ஒழுங்கு ஆகியவற்றைப் பாதிக்கக்கூடியவகையில் எதிர்மறையாக நடந்துகொண்டால் அல்லது இனங்கள், மதங்கள் மத்தியில் முரண்நிலையை உருவாக்கினால் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை ரத்துச்செய்வதற்கும் ஊடகவியலாளர்களைச் சிறையில் அடைப்பதற்கும் வழிவகுக்கக்கூடியதாக இந்த உத்தேச சட்டமூலம் அமையும்.

சுதந்திர சமுதாயம் ஒன்றில் மக்கள் தங்களது சிந்தனைகளை ஹைட் பார்க்கிலோ அல்லது பாராளுமன்றத்தில் தங்களது பிரதிநிதிகள் ஊடாகவோ வெளிப்படுத்தக்கூடியதாக வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன. இந்த புதிய சட்டத்தின் ஊடாக பேச்சுச் சுதந்திரத்துக்கும் ஊடகங்களுக்கும் வரக்கூடிய அச்சுறுத்தலை, குடியியல் உரிமைகள், அரசியல் உரிமைகள் தொடர்பில் உலகின் ஒரு தரநிலையான வழிகாட்டியாக விளங்கும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச ஒப்பந்தம் (**International Covenant on Civil and Political Rights - ICCPR**) இலங்கையில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்திருக்கின்ற பின்புலத்திலேயே நோக்க முடியும். அரசாங்கங்கள் தவறாக பயன்படுத்தக்கூடிய முறையில் இந்த சர்வதேச ஒப்பந்தம் இலங்கைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஒலிபரப்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்பட்டால் இதே போன்ற விளைவுகளைக் கொண்டுவரக்கூடியது சாத்தியம். அரசாங்கங்கத்தினால் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கென்று கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம் தவறாக பயன்படுத்தப்பட்ட இன்னொரு துரதிர்ஷ்டவசமான உதாரணமாக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச ஒப்பந்தச் சட்டத்தின் கீழான நடாஷா எதிரிசூரியவின் கைதும் தடுப்புக்காவலும் அமைந்திருக்கிறது. தனக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னதாக நாட்டை விட்டு வெளியேறி தற்போது வெளிநாட்டில் இருப்பதால் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ சிறையில் அடைக்கப்படவில்லை.

## தெரிவுசெய்து இலக்குவைத்தல்

நடாஷா எதிரிசூரிய அறகலய போராட்டத்தில் பங்கேற்ற ஒருவராக இருப்பதால் அவரின் விவகாரத்தை தாங்கள் விசேட கவனத்துடன் நோக்குவதாக பொலிஸ் அதிகாரி கூறியதாக அரசாங்க ஊடகம் செய்தி வெளியிட்டது. இது அவரது கைதுக்கான காரணம் அரசியல் நோக்குடனானது என்ற அனுமானிக்க வைக்கிறது. வெறுப்புப்பேச்சை தடை செய்யும் குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச ஒப்பந்தச் சட்டத்தின் 3(1) பிரிவை மீறியதாகவே நடாஷா மீது குற்றஞ்சாட்டப்படுகிறது. பாரபட்சம், வன்முறை மற்றும் பகைமையை தூண்டுவதாக அமையக்கூடிய வெறுப்புணர்வை ஆதரித்துப் பேசுவதை பிரிவு 3(1) தடைசெய்கிறது.

நடாஷாவின் விவகாரத்தில் அவரது பேச்சு வெறுப்புப்பேச்சாக இருப்பதால் சட்டவிரோதமானது என்று கூறுவதானால் சம்பந்தப்பட்ட குழுவுக்கு எதிராக பாரபட்சம் காட்டுமாறு அல்லது வன்முறையில் ஈடுபடுமாறு மற்றவர்களைத் தூண்டிவிடும் நோக்கம் அவருக்கு இருந்தது என்பதை தெளிவாகக் காண்பிக்க வேண்டியது அவசியமாகும் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பான சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியிருக்கிறது. இந்த பிரமாணத்தின் அடிப்படைக்கு நடாஷாவின் கருத்துவெளிப்பாடு பொருந்தவில்லையானால் அது அதிர்ச்சிதருவதாக, மனதைப் புண்படுத்துவதாக அல்லது வருத்தந்தருவதாக இருந்தாலும் அது அரசினால் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் மன்னிப்புச்சபை குறிப்பிடுகிறது.

கடந்த காலத்தில் வெறுப்புப்பேச்சுக்களின் இலக்காக சிறுபான்மை இனத்தவர்களும் சிறுபான்மை மதத்தவர்களும் விளங்கிய பல சம்பவங்களைக் கூறமுடியும். ஆனால் அவர்களை பாதுகாப்பதில் அல்லது அத்தகைய சம்பவங்களுக்கு பொறுப்பானவர்களை கைதுசெய்ய நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கங்கள் அசமந்தமாகவே இருந்துவந்திருக்கின்றன. இத்தகைய இலக்குவைப்புக்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன. குறிப்பாக தேர்தல் காலங்களில் குறுகிய தேசியவாத உணர்வுகளைத் தூண்டிவிடுவதன் மூலமும் மற்றவர்கள் ' பீதியூட்டுவதன் மூலமும் மக்கள் பிரிவுகளை அணிதிரட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.'

வெறுப்புப்பேச்சு வீச்செல்லைக்கு வெளியிலான சமூக மற்றும் அரசியல் விமர்சனங்களைச் செய்பவர்களுக்கு எதிராக குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த சர்வதேச ஒப்பந்தச் சட்டத்தை பயன்படுத்துவதை நாட்டின் அரசியல் தலைவர்களும் அரசாங்கத் தலைவர்களும் தவிர்க்கவேண்டும். சமூக ஊடகத்தளமான எஸ்எல் -- விலொக்ஸின் உரிமையாளர் பரூனோ திவாகரவின் கைது ஒலிபரப்பு ஒழுங்கமைப்பு ஆணைக் குழு சட்டமூலம் கொண்டுவரக்கூடிய பாதகமான நிலைவரத்துக்கான மிகவும் வேதனை தருகின்ற ஒரு அறிகுறியாகும்.

சுதந்திரமாக கருத்தை வெளியிடுவதற்கும் விமர்சனரீதியாக கருத்துக்களை கூறுவதற்குமான இடப்பரப்புக்கு எதிரான நடவடிக்கை ஜனநாயக அரசியல் சமுதாயம் ஒன்றில் அதுவும் குறிப்பாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மக்களுக்கு பெரும் துன்பம் நேர்ந்த சூழலில் இருக்கின்றதும் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றதுமான இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது அல்ல.கைது மற்றும் அதற்கான காரணகாரிய அடிப்படை குறித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மாஅதிபரிடம் கேட்டதன் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செய்திருக்கும் தலையீடு

அதிகாரங்கள் செயற்படுத்தப்படுகின்ற முறைகள் மீது தடுப்புக்களையும் சமப்படுத்தல்களையும் பிரயோகிக்கும் நோக்குடனான நிறுவனங்களின் சுயாதீனம் நடப்பில் இருக்கிறது என்பதற்கான நம்பிக்கை தரும் ஒரு அறிகுறியாகும்.

முரண்படுகின்ற இன, மத மற்றும் ஒருதலைச்சார்பான கருத்துக்கள் மற்றும் நோக்குகளுக்கு இடையில் பிணக்குகளை தீர்க்கும் நடுநிலையான மத்தியஸ்தராக இலங்கை அரசு மாறவேண்டும். பல்வேறு வழிகளிலும் குறுகிய கால இடைவெளியிலும் ஜனநாயக விரோதமான அதிகாரங்களைக் கையில் எடுத்துக்கொள்வது நாடு எதிர்பார்த்துநிற்கும் பொருளாதார மீளெழுச்சியையும் ஜனநாயக ஆட்சிமுறையையும் காண்பதற்கு உதவுவது சாத்தியமில்லை. சுதந்திரம், நீதி மற்றும் நேர்மையான செயற்பாடு இல்லாமல் ஜனாதிபதி விக்கிரமசிங்க விரும்புகின்ற பொருளாதார அபிவிருத்தியை காணமுடியும் என்று நம்பிக்கையை வளர்க்கமுடியாது.














வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றது. இந்த உற்சவத்தில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களைச் செலுத்தினர்.

(படங்கள் ச.தவசீலன்)





# கிழக்கு கல்வியற் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கிலேயே நியமிப்பதற்கு நடவடிக்கை

## எம்.பிக்கள் குழுவிடம் கல்வியமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜூன் 07

**கிழக்கு மாகாணத்துக்கு வெளியே நியமனம் செய்யப்பட்ட கிழக்கு மாகாண கல்வியற் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கு மாகாணத்தில் நியமிக்கத் தேவையான நடவடிக்கைகளைத் தான் எடுக்க தயாராக உள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரம ஜெயந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவிடம் தெரிவித்தார்.**



கிழக்கு மாகாண கல்வியற் கல்லூரி ஆசிரியர், ஆசிரியைகளுக்கான நியமனம் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே வழங்கப்படவுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து அந்த ஆசிரியர் நியமனத்தில் உள்ள பிரச்னைகளுக்கு தீர்வை காணும் நோக்கில் சுற்றாடல் அமைச்சர் ஏ. நஸீர் அஹமட், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் கல்வியமைச்சர் சுசில் பிரம ஜயந்தவை கல்வியமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

கிழக்கு மாகாண கல்வியற் கல்லூரி ஆசிரியர், ஆசிரியைகளுக்கு கிழக்கிலேயே நியமனம் வழங்கவேண்டும் என்றும், கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு இடம்பெறவுள்ள அநீதி தொடர்பிலும், கிழக்கு மாகாண ஆசிரியர் வெற்றிடம் தொடர்பிலும், கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் அழுத்தமாக கோரிக்கை முன்வைத்த எம்.பிக்கள் குழு, துரித கதியில் நடவடிக்கை எடுக்குமாறு கோரினர்.

இவற்றெல்லாம் கேட்டறிந்த அமைச்சர் ஏற்கனவே நியமன கடிதங்கள் சகல மாகாணங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் மாகாண ஆளுநர்களிடம் கடிதங்களை மீளப்பெறல் தொடர்பில் கலந்துரையாடவுள்ளதாவும் இன்று மாலை முதற்கட்டமாக ஊவா மாகாண ஆளுநரை அழைத்து பேசவுள்ளதாகவும், இந்த நியமனத்தில் சிறிய தவறுகள் இடம்பெற்றுள்ளதைத் தான் அறிந்து கொண்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டுக்கு தனது பூரண ஆதரவை எப்போதும் வழங்க தயாராக உள்ளதாவும், கிழக்கு மாகாணத்திற்கு வெளியே நியமனம் செய்யப்பட்ட கிழக்கு மாகாண கல்வியற்கல்லூரி ஆசிரியர்களை கிழக்கு மாகாணத்தில் நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார் என இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

# கல்முனையில் களைகட்டிய உலக சுற்றாடல் தின நிகழ்வு



காரைதீவு, ஜூன் 07

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் பல நிகழ்வுகள்வைத்திய சாலையின் பணிப்பாளர் மருத்துவர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றன.

நேற்று முன்தினம் உலக சுற்றாடல் தினம் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எஸ். உதயராஜ் , பிராந்திய சுற்றாடல் அதிகாரி திருமதி செவ்வேள் குமரன், வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஜெ. மதன் , கல்முனை சென்றல் பினான்ஸ் முகாமையாளர் ஜெ. அனோஜ் , வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின்போது கடந்த மாதம் பிறந்த நாளை கொண்டாடிய வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களை மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக பழ மரங்கள் நடப்பட்டன.

இந்நிகழ்வில் வைத்தியசாலை ஊழியர்களின் குழந்தைகளினால் சுற்றாடல் பாதுகாப்பு, மரங்களை பாதுகாப்போம், பாதுகாப்பான இயற்கை உணவுகள் மற்றும் இயற்கை கிருமி நாசினிகள் என்னும் தொனிப்பொருட்களில் சுற்றாடல் காட்சிப்படுத்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# மருதமுனை 65மீற்றர் வீட்டுத் திட்டத்தில் வீதி விளக்கு பொருத்தும் பணி ஆரம்பம்

அம்பாறை, ஜூன் 07

அண்மையில் மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட மருதமுனை சுனாமி வீட்டுத்திட்டத்தில் உள்ள உள்ளக தெருக்களுக்கான மின் விளக்குகளை பொருத்தும் வேலைத்திட்டம் நேற்று முன் தினம் மருதமுனை சுனாமி வீட்டுத் திட்டத்தில் இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம் அஸ்மி, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி,கல்முனை மாநகர பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம் அஸீம், பொறியியலாளர் ஏ.ஜ.ஜெளஸி தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம். அமீர் உடபட பலரும் கலந்து கொண்டனர்.

இவ் வீட்டுத்திட்டத்தில் ஏற்கனவே தனித் தனி வீடுகளுக்கான மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில் தெருக்குகளில் உள்ள மின் விளக்குகள் இதுவரை காலமும் இல்லாமையினால் மக்கள் மிகுந்த சிரமங்களுக்கும், கஷ்டங்களுக்கும் உட்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

(அ)

# மீண்டும் தலைவராக மீரா இஸடீன் தெரிவு



நிந்தவூர், ஜூன் 07

அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் வருடாந்த ஒன்று கூடலும் வருடாந்த பொதுக் கூட்டமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை முழு நாள் நிகழ்வாக நடைபெற்றது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா. எஸ்.இஸடீனின் தற்காலிக தலைமையிலும், செயலாளர் ஏ.ஜே.எம்.ஹனிபாவின் நெறிப்படுத்தலிலும், ஒலுவில் இஸ்மாயில் ஹாஜியார் (அஸீஸ்) தோட்டமண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன.

கிழக்கிலங்கையின் முதன்மை மிக்க ஊடக அமைப்பான அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயற்பாடுகளை புதிய உத்வேகத்துடனும், வினைத்திறனுடனும் முன்னெடுப்பதற்கான பல்வேறு செயற்திட்டங்கள் நிகழ்வில் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன

சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இடம் பெற்றபோது மீண்டும் தலைவராக சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா எஸ் இஸடீன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் இத்தெரிவு மூலம் அவர் சம்மேளனத்தின் ஆயுட்காலத் தலைவராக செயற்படுவாரெனவும் உறுப்பினர்களின் ஏகோபித்த தீர்மானமாகவும் அறிவிக்கப்பட்டது.

தலைவர் மீரா இஸடீன் சுகயீனம் காரணமாக ஒரு சில வருடங்கள் தலைமைப்பதவியிலிருந்து விலகியிருந்த காலகட்டத்தில் சம்மேளனத்தின் செயற்பாடுகளில் ஏற்பட்டிருந்த தொய்வு நிலை குறித்து உறுப்பினர்கள் பலரும் கூடத்தில் கவலை வெளியிட்டனர்.

கடந்த 22 வருடங்களுக்கு மேல் மேற்படி சம்மேளனத்தின் ஆளுமையும், செயற்திறனும் மிக்க தலைவராக செயற்பட்டு வரும் சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் மீரா எஸ். இஸடீன், கிழக்கில் பிராந்திய ஊடகவியலாளர்களின் நலன்சார் பல்வேறு வேலைத்திட்டங்களை சம்மேளனம் மூலம் முன்னெடுத்து வந்ததுடன், தேசிய மற்றும் கிழக்கு ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் பல முக்கியத்துவமிக்க நிகழ்வுகளையும் தமது அயராப் பெரு முயற்சியில் சிறப்புற நடத்தினார்.

சம்மேளனத்தின் புதிய செயலாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எம்.ஏ.சமட், பொருளாளராக இஸட். ஏ.எம்.றகுமான் ஆகியோரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் சம்மேளன சிரேஷ்ட ஆலோசகர்களாக கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம், எஸ்.சிறாஜூடீன், எம்.ஐ.எம். சம்சுடீன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கிழக்கு மாகாண ஆளுநரின் பொதுமக்கள் சந்திப்பு இன்று

திருமலை, ஜூன் 07

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் வழிகாட்டுதலின் கீழ் இன்று புதன்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக புதிய கேட்போர் கூடத்தில் மக்கள் சந்திப்பு நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு இந்த நிகழ்வு ஆளுநரின் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும்.

மாவட்டத்தினைச் சேர்ந்த மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்னைகளை இதன்போது முன்வைக்க முடியும்.

இந்நிகழ்வில் மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து நிறுவனங்களின் பிரதானிகளும் கலந்து கொள்வர்.

(அ)

# மடிப்பிச்சை எடுக்கும் சடங்கு

காரைதீவு, ஜூன் 07

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசித் திங்கள் திருக்குளிர்ச்சி சடங்கின் ஓரங்கமான மடிப்பிச்சை எடுக்கும் நிகழ்வு நேற்று முன் தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

(அ)



# தகைமைகள் அடிப்படையில் மாத்திரமே கனடாவில் குடியேறுபவர்கள் வரமுடியும்!

## ஐந்து துறைகளில் அனுபவம் உடையவர்களுக்கு மட்டும் குடியேற்ற விண்ணப்பங்களின்போது அதிக முன்னுரிமை

ஒன்ராறியோ, ஜூன் 07

தொழிற்சந்தையை அடிப்படையாகக் கொண்டு குடியேறிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கும் புதிய திட்டம் ஒன்றை அரசாங்கம் அறிமுகபடுத்தவுள்ளது.

மேலும், ஐந்து துறைகளில் அனுபவம் உடையவர்களுக்கு மாத்திரம் குடியேற்ற விண்ணப்பங்களின் போது அதிக முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, கனேடிய குடிவரவு அமைச்சர் சீன் ப்ரேசர் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார்.



இதனடிப்படையில், சுகாதார துறை, விஞ்ஞான, தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகியதுறைகள், தச்சு வேலை, குழாய் பொருத்துதல் மற்றும் ஒப்பந்தப் பணிகள், போக்குவரத்து, விவசாயம் மற்றும் விவசாய உணவு ஆகிய ஐந்து துறைகளில் அவர்கள் அடையாளப்படுத்துகின்றனர்.

மேலும், பிரெஞ்சு மொழியாற்றல் காணப்பட்டால் அதுவும் விசேட தகைமையாகக் கருத்திற் கொள்ளப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த பிரதான ஐந்து துறைகளைச் சேர்ந்த 82 தொழில்களுக்காக தெரிவு செய்யப்பட உள்ளதாக அமைச்சர் ப்ரேசர் அறிவித்துள்ளார்.

நாட்டில் தொழிற்சந்தையில் சில துறைகளில் ஆளணி வளப் பற்றாக்குறை நிலவி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

துறைசார் சிறப்புத் தேர்ச்சியுடைய தகுதியான பணியாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதன் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் எனவும் ப்ரேசர் தெரிவித்தார். (அ)



# ரஷ்யத் தாக்குதலில் உக்ரைனின் மிகப் பெரிய அணை உடைந்தது!

கீவ், ஜூன் 07

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் முடிவின்றி தொடர்ந்து வரும் நிலையில், தாக்குதல்களில் தெற்கு உக்ரைனில் உள்ள மிகப் பெரிய அணையான ககோவ்கா நீர்மின் அணை சேதமாகியுள்ளது.

இடிந்து கிடக்கும் இந்த அணையின் காணொளிகள் வசமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

தெற்கு உக்ரைனில் உள்ள டினிப்ரோ ஆற்றின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுள்ள ககோவ்கா அணையின் ஊடாக கிரிமியா தீபகற்பம், அணுமின் நிலையம் ஆகியவற்றுக்கு தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது.

தாக்குதல்களில் அணை உடைந்துள்ளதன் காரணமாக அணைக்கு கீழே உள்ள கிராமங்களுக்கு வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால், தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை உடனடியாக வெளியேற்றி பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு உக்ரைன் அரசு வேண்டுகோள் விடுத் துள்ளது.


தாக்குதலில் அணை உடைந்த சம்பவம் குறித்து ரஷ்ய படையினர் எவ்வித விளக்கங்களை வழங்கவில்லை. எனினும் அணை உடைப்பு தொடர்பில் உக்ரைன், ரஷ்யா மீது குற்றம் சுமத்தியுள்ளது. (அ)

# அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் போட்டியில் இணைந்தார் பென்ஸ் !

நியூயோர்க், ஜூன் 07

அமெரிக்காவின் குடியரசுக் கட்சி சார்பாக அடுத்த ஜனாதிபதி வேட்பாளருக்கான போரில் முன்னாள் துணை ஜனாதிபதி மைக் பென்ஸ் இணைந்துள்ளார்.

64 வயதான மைக் பென்ஸ், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆட்சியின் போது அமெரிக்காவின் 48வது துணை ஜனாதிபதியாக பதவி வகித்திருந்தார்.



ஜனாதிபதி வேட்பாளருக்காக உத்தியோகபூர்வமாக பதிவு செய்துள்ள அவர், அடுத்த வாரத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டு தனது வேட்புமனுவை அறிவிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்காவின் குடியரசுக் கட்சி சார்பாக ஜனாதிபதித் தேர்தலுக்கு என இதுவரை 7 பேர் வேட்பாளராக இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# நியூஸிலாந்தின் முன்னாள் பிரதமர் ஜசிந்தா ஆர்டனுக்கு உயரிய விருது

வெலிங்டன், ஜூன் 07

நியூஸிலாந்தின் முன்னாள் பிரதமர் ஜசிந்தா ஆர்டனுக்கு அந்நாட்டின் மிக உயரிய விருதுகளில் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்று காலப்பகுதி மற்றும் கிறிஸ்ட்சேர்ச் தீவிரவாத தாக்குதலின்போது ஆற்றிய சேவைகளுக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

நியூஸிலாந்தின் இரண்டாந்தர உயரிய விருதான டேம் கிராண்ட் கம்பானியன் விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. (அ)

## ஒடிசா இரயில் விபத்து;

# ஓர் உடலுக்கு பல குடும்பத்தினர் உரிமை கோருவதால் குழப்பம்!

புதுடில்லி, ஜூன் 07

ஒடிசாவின் பாலசோரில் நடந்த இரயில் விபத்தில் 275 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களின் உடல்களை கேட்டு வரும் குடும்பத்தினருக்கு உதவியாக புவனேஸ்வர் மாநகராட்சி மற்றும் மேற்கு வங்காள அரசு இணைந்து உதவி மையங்களை ஏற்படுத்தி உள்ளன.

இது குறித்து புவனேஸ்வர் நகர துணை காவல் ஆணையாளர் பிரதீக் சிங் கூறுகையில்-

ஒரு உடலுக்கு பல குடும்பத்தினர் உரிமை கோரும் குழப்பமான நிகழ்வும் காணப்படுகிறது.

இதுபோன்ற நேரத்தில் நாங்கள் மரபணு பரிசோத னைக்கு செல்கிறோம். அனைத்து உடல்களில் இருந்தும் மரபணு மாதிரி களை நாங்கள் எடுத்து வைத்திருக்கிறோம் என கூறியுள்ளார். (அ)

# ஒலியைவிட 15 மடங்கு வேகத்தில் செல்லும் ஹைபர்சொனிக் ஏவுகணையை ஈரானிடம்

தெஹ்ரான், ஜூன் 07

ஈரானின் புரட்சிகர காவல்படையானது, ஒலியைவிட 15 மடங்கு அதிக வேகத்தில் செல்லக்கூடிய தனது ஹைப்பர்சோனிக் ஏவுகணையொன்றை ஈரான் நேற்று காட்சிப்படுத்தியுள்ளது.

ஒலியின் வேகத்தைவிட ஐந்து மடங்கு அதிக வேகமானது ஹைப்பர் சோனிக் வேகம் எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்த ஏவுகணை மணித்தியாலத்துக்கு 1400 கிலோ மீற்றர் வேகத்தில் பயணம் செய்யக்கூடியது என ஈரானின் ஐ.ஆர்.என்.ஏ செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

‘பத்தாஹ்’ என இந்த இதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

ஈரானிய ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி, இந்த ஏவுகணையின் ஹைப்பர்சோனிக் ஆற்றலை புகழ்ந்துள்ளதுடன், இது ஈரானின் தடுப்பாற்றலை அதிகரிக்கும் எனவும பிராந்திய நாடுகளுக்கு அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை கொண்டு வரும் எனவும் கூறியுள்ளார்.

இந்த ஏவுகணையின் அறிமுக வைபவத்தில் ஈரானிய புரட்சிகர காவல்படையின் தலைவர் ஜெனரல் ஹொஸைசன் சலாமி உட்பட உயர் இராணுவ அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

இந்த வைபவம் எங்கு நடந்தது என்பது அறிவிக்கப்படவில்லை. (அ)



# உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டி இன்று ஆரம்பம்!



லண்டன், ஜூன் 07

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி போட்டி இன்று புதன்கிழமை இலங்கை நேரம் பிற்பகல் 3 மணிக்குத் தொடங்குகிறது. இதில், இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதுகின்றன.

முதலாவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியை நியூசிலாந்து அணி கைப்பற்றியது. இந்தமுறை சம்பியன் பட்டத்தை கைப்பற்றிவிட இந்தியா, அவுஸ்திரேலிய அணிகள் கடுமையாக போட்டியிடவுள்ளன.

இறுதியாக 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இரு அணிகளும் மோதின. இதில், 2-1 என்ற கணக்கில் இந்திய அணி ஆதிக்கம் செலுத்திய நிலையில் 4ஆவது போட்டியை நடத்தமுடியாது போனது. எனி னும், காலம்தாழ்த்தி நடத்தப்பட்ட போட்டியில் ஆஸி வென்றதால் தொடர் 2- 2 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்த இறுதி டெஸ்ட் போட்டி இங்கிலாந்தின் தலை நகர் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடக்கிறது. பழமையான இந்த மைதானத்தில் 104 டெஸ்ட் போட்டிகள் நடைபெற்றுள்ளன.

எதிர்த்து ஆடும் இந்திய அணியை விட அவுஸ்திரே லிய அணி துடுப்பாட்ட வரிசையில் பலமாக உள்ளது. அந்த அணியின் உஸ்மான் கவாஜா 69.91 ஓட்ட சராசரி யில் 1,608 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவர் தவிர மார்னஸ் லபுஷாக்னே, ஸ்ரீவன் ஸ்மித், டிராவிஸ் ஹெட் ஆகியோர் 50 மேற்பட்ட ஓட்ட சராசரியை கொண்டுள் ளனர். அணியின் ஓட்ட சராசரி 46.07ஆக உள்ளது.

இதனிடைய இந்திய அணியின் ஓட்ட சராசரி 33.74ஆக உள்ளது. கடந்த 12 மாதங்களில் விராட் கோலி, புஜாரா, ரஹானே போன்ற முக்கிய வீரர்கள் சிவப்பு பந்து கிரிக்கெட்டில் ஓட்டங்களை எடுப்பதற்கு கடுமையாக போராட வேண்டியுள்ளது.

பந்து வீச்சில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சவாலாக உள்ளன. (ஐ)



# டெஸ்ட் போட்டிகளில் மீண்டும் மொயின் அலி?

லண்டன், ஜூன் 07

ஆஷஷ் தொடரிலிருந்து ஜாக் லீச் காயம் காரணமாக வெளியேறிய நிலையில் இங்கிலாந்து கிரிக்கெட் சபை மொயின் அலியை நாடியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆஷஷ் தொடர் இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் தனித்துவமான டெஸ்ட் தொடராகும். 5 போட்டிகள் கொண்ட இந்தத் தொடர் எதிர் வரும், 16ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

மொயின் அலி 64 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2,914 ஓட்டங்களும், 195 விக்கெட்களும் எடுத்துள்ளார். கடைசியாக 2022 செப்ரெம்பரில் நடந்த டெஸ்ட் போட்டியுடன் ஓய்வை அறிவித்தார்.

இந்நிலையில், இங்கிலாந்து அணிக்கு மொயின் அலி திரும்பினால் பென் ஸ்டோக்ஸ்- மக்கலம் எதிர்பார்க்கும் “பேஸ் போல்“ கிரிக்கெட்டுக்கும் பொருத்தமாக இருப்பாரென பிரபல வேகப் பந்து வீச்சாளர் ஸ்ருவர்ட் பிரோட் தெரிவித்துள்ளார்.



# பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் ஹடாத் மியா காலிறுதியில்!

பாரிஸ், ஜூன் 07

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரின் காலிறுதி சுற்றுக்கு ஹடாத் மியா முதன்முறையாக தகுதி பெற்றுள்ளார்.

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடர் பாரிஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

இதன் மகளிர் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றில் நேற்றுமுன்தினம் 7ஆம் நிலை வீராங்கனையான துனிசியாவின் ஆன்ஸ் ஜபீர் 6-3, 6-1 என்ற நேர் செற்றில் 33ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் பெர்னார்டா பேராவை தோற்கடித்து முதன் முறையாக காலிறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

காலிறுதி சுற்றில் ஆன்ஸ் ஜபீர், 14ஆம் நிலை வீராங்கனையான பிரேசிலின் பீட்ரிஸ் ஹடாத் மியாவை எதிர்கொள்கிறார்.

பீட்ரிஸ் ஹடாத் மியாவும் முதன்முறையாக பிரெஞ்சு ஓப்பனில் காலிறுதியில் விளையாட உள்ளார். இவர், தனது 4ஆவது சுற்றில் 3 மணி நேரம் 51 நிமிடங்கள் போராடி ஸ்பெயினின் சாரா சொரிப்ஸ் டார்மோவை 6-7 (3-7), 6-3, 7-5 என்ற செற் கணக்கில் தோற்கடித்தார். (ஐ)

# மீண்டும் பார்சிலோனாவுக்காக விளையாட மெஸ்ஸி விருப்பம்!

பாரிஸ், ஜூன் 07

உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான மெஸ்ஸி மீண்டும் பார்சிலோனா அணியில் இணைந்து விளையாட விரும்புகிறார் என்று அவரின் தந்தை ஜார்ஜ் மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக பார்சிலோனா கழக அணியின் தலைவர் ஜோன் லபோர்தாவுடன், ஜோர்ஜ் மெஸ்ஸி பேசியுள்ளார்.

“லியோ (மெஸ்ஸி) மீண்டும் பார்சிலோனா அணிக்கு வர விரும்புகிறார். எனக்கும் அவர் அதை செய்வதில் விருப்பம் உள்ளது. நிச்சயம் இந்த நகர்வை எங்கள் தரப்பில் முன்னெடுப்போம்” என பத்திரிகையாளர் ஒருவரிடம் ஜோர்ஜ் மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

‘அது அத்தனை எளிதான காரியம் அல்ல. இருந்தாலும் அதற்கான முயற்சிகள் எங்கள் தரப்பில் மேற்கொள்ளப்படும். அதற்கான சாத்தியங்களை நாங்கள் நிச்சயம் செய்வோம்’ என பார்சிலோனா கழக அணியின் தலைவர் ஜோன் லபோர்தா தெரிவித்துள்ளார்.

மெஸ்ஸி தனது 13ஆவது வயதில் இருந்து 21 ஆண்டுகள் பார்சிலோனா அணிக்காக விளையாடியிருந்தார். அந்த அணிக்காக 520 போட்டிகளில் 474 கோல்கள் அடித்திருந்தார்.

இந்தநிலையில், மெஸ்ஸிக்கு வழங்கப்படும் ஊதியத்தை - நிதி சுமையை காரணம் காட்டி 2021-22 தொடரில் ஒப்பந்தத்தை தொடர முடியாது என பார்சிலோனா தெரிவித்தது. அப்போது பார்சிலோனாவை விட்டு விலக உள்ளதாக மெஸ்ஸி அறிவித்தார். இதன் பின்னர், கடந்த இரு வருடங்களாக பிரான்ஸின் பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்காக விளையாடிய அவர் தனது ஒப்பந்தத்தை முடிவுறுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)







# டெஸ்டின் எதிர்காலம் கவலையளிக்கின்றது

லண்டன், ஜூன் 07

டெஸ்ட் கிரிக்கெட்டின் எதிர்காலம் குறித்து சிறிது கவலையாக இருக்கிறது என்று அவுஸ்திரேலியாவின் ஸ்ரீவ் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

96 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள ஸ்மித் 8,792 ஓட்டங்கள் எடுத்துள்ளார். இதில் 30 சதங்கள் 37 அரைச்சதங்கள் அடங்கும். ஐ. சி. சி. சிறந்த துடுப்பாட்ட வரிசையில் 3ஆவது இடத்தில் உள்ளார். ஆஷஷ் தொடரிலும் சிறப்பாக விளையாடி வருகிறார். தொன் பிராட்மனுடன் ஒப்பிடும் அளவுக்கு திறமையான துடுப்பாட்ட வீரர்.

இன்று நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் ஸ்மித் முக்கியமான பங்களிப்பை அளிப்பார் என்பது கிரிக்கெட் விமர்சகர்களின் கருத்து.

இருபது - 20 போட்டிகளின் அபார வளர்ச்சியால் டெஸ்ட் கிரிக்கெட் பாதிக்கப்பட்டுள்ளதாக பலரும் கருத்து தெரிவித்துவரும் நிலையில் ஆஸி. நட்சத்திர வீரர் ஸ்மித்தும் கவலை தெரிவித்துள்ளார்.

அவர் கூறுகையில், டெஸ்ட் கிரிக்கெட் குறித்து சிறிது கவலையாக இருக்கிறது. ஆனால், டெஸ்ட் கிரிக்கெட் இன்னும் நன்றாகவே இருக்கிறது. தற்போது நல்ல இடத்தில்தான் உள்ளது. சமீபத்தில் பார்த்த சில போட்டிகள் அற்புதமாக இருந்தன. டெஸ்ட் கிரிக்கெட்டை நேசிப்பவர்கள் இருக்கும்வரை அனைத்து கிரிக்கெட் சபைகளின் மனதிலும் இருக்கும். டெஸ்ட் கிரிக்கெட் தொடர்ந்து இருக்கும். மேலும் இன்னும் சிறப்பான நாள்கள் வரும் என நம்புகிறேன் - என்றார். (ஐ)

# சமூக வலைத்தளங்கள் ஊடாக பெரும் நிதி மோசடி சம்பவங்கள்

## மக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

கொழும்பு, ஜுன் 07

**சமூக வலைத்தளங்கள் ஊடாக இடம்பெற்ற பல நிதி மோசடி சம்பவங்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.**

**தமது தனிப்பட்ட விவரங்களை வெளிநபர்களுக்கு வழங்கும்போது மிகவும் அவதானத்துடன் செயற்படுமாறு அவர் கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- பொது மக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது தனிப்பட்ட தகவல்களை அறியாதவர்களுக்கு வழங்கவேண்டாம்.

குறிப்பாக தேசிய அடையாள அட்டை இலக்கம், கடவுச்சீட்டு இலக்கம், சாரதி அனுமதி பத்திர இலக்கம், அவற்றின் பிரதிகளுடன், வங்கி கணக்கு விவரங்களையும் வழங்கவேண்டாம்.

விசேடமாக வங்கி கணக்கு தொடர்பில் குறுந்தகவல் ஊடாக பெறப்படும் ஓ.ரி.பி. இலக்கத்தை எந்தவொரு காரணத்திற்காகவும் யாருக்கும் வழங்கவேண்டாம்.

பல்வேறு விதமான கவர்ச்சிகரமான சலுகைகள் வரலாம், அவற்றால் ஏமாற வேண்டாம் என பொலிஸார் சார்பில் பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

இவ்வாறான மோசடியாளர்கள் சமூக வலைத்தளங்கள் ஊடாக உங்களை தொடர்பு கொள்ள முயற்சிப்பார்கள்.

எனவே இது போன்ற நபர்கள் தொடர்பில் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்.

உங்களுக்கு அடையாளம் தெரியாதவர்களிடம் சிக்கி சொத்துக்களை இழக்க வேண்டாம்- என்றார்.

(அ)

# நாணய நிதிய வேலைத்திட்டம் இலங்கை-அமெரிக்கா பேச்சு



கொழும்பு, ஜுன் 07

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத் திட்டத்தின் முன்னேற்றம், பொருளாதார சீர்திருத் தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் தொடர்பிலும் இலங்கையும் அமெரிக்காவும் கலந்துரையாடி யுள்ளன.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவுக்கும், ஆசியாவுக்கான அமெரிக்க திறைசேரியின் பிரதி உதவிச் செயலாளர் ரொபேர்ட் கப்ரோத்துக்கும் இடையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது.

இக்கலந்துரையாடல் பலனளித்ததாகவும், இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டை படிப்படியாக தளர்த்துவதற்கான திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் பேசப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார மீட்புச் செயற்பாட்டிற்கான தொடர்ச்சியான ஆதரவுக்காக அமெரிக்க அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு மற்றும் தொழில்நுட்ப ஆதரவுக்கும் இராஜாங்க அமைச்சர் இதன்போது பாராட்டு தெரிவித்தார்.

(அ)

# துருக்கி ஜனாதிபதி எர்டோகனை சந்தித்தார் இலங்கை சபாநாயகர்!

கொழும்பு, ஜுன் 07

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகனுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற தையிப் எர்டோகனின் உத்தியோகபூர்வ அரச வைபவத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கலந்துகொண்டார்.

இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பல வருட கால இராஜதந்திர உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு சபாநாயகர் அவருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சமீபத்தில் உலகையே உலுக்கிய துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்க முன் வந்த இலங்கைக்கு ஜனாதிபதி எர்டோகன் நன்றியும் தெரிவித்துள்ளார்.

(அ)



# வாதரவத்தையில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் 33ஆம் ஆண்டு நினைவு





யாழ்ப்பாணம், ஜுன் 07

இந்திய அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம், புத்தூர் வாதரவத்தையில் நேற்று இடம்பெற்றது.

1987 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 05ஆம் திகதி வாதரவத்தைப் பகுதியில் இந்திய அமைதிப்படையினரால் ஒன்பது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

அமைதிப்படையால் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு பிள்ளையார் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனை செய்யப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் பிள்ளைகள், மனைவி மற்றும் உறவினர்கள் ஆகியோரால் பொதுச்சுடர் மற்றும் நினைவுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

(அ)

# அணுச் சோதனை தடை ஒப்பந்த அமைப்பினர் இலங்கை வந்தனர்!

கொழும்பு, ஜுன் 07

அணுசோதனை தடை ஒப்பந்த அமைப்பின் நிறைவேற்று செயலாளர் ரொபட் ப்ளோவட் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொறியியலாளர் நஸீர் அஹமட் உடனான உயர்மட்ட சந்திப்பொன்று சுற்றாடல் அமைச்சில் நேற்று முன் தினம் இடம்பெற்றது. இதில், அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்கவும் கலந்துகொண்டார்.

பரந்த தொழில் நுட்பம்-விஞ்ஞானம் என்பவற்றை பரந்த அடிப்படையில் சகலருக்கும் பயனளிக்கும் விதத்தில் உறவை முன்னெடுப்பது தொடர்பாக அமைச்சர் வலியுறுத்தியதுடன் அர்ப்பணிப்புடன் செயல்படுவதன் அவசியம் தொடர்பாகவும் விளக்கினார்.

1996 இல் ஒக்ரோபர் 24 இல் அணுச் சோதனை தடை ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டது.

2000 ஆம் ஆண்டில் தொழிநுட்ப வசதி தொடர்பான ஒப்பந்தத்தின் பின்னர் அதன் அடிப்படையிலான துணை நில அதிர்வு நிலையமொன்று பல்லேகலையில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் நஸீர் அஹமட், அணு இல்லாத உலகம் என்ற இலக்கை அடைவதற்கு எமது நாடு பூரண ஒத்துழைப்பை அர்ப்பணிப்புடன் செய்து வருவதாக சுட்டிக் காட்டினார்.

(அ)

# அமெரிக்கப் பேராசிரியர் தவம் கலாசாலையை பார்வையிட்டார்



யாழ்ப்பாணம், ஜுன் 07

அமெரிக்காவில் இருந்து வருகை தந்த சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை நிபுணரும் பேராசிரியருமாகிய தவம் தம்பிப் பிள்ளை தனது யாழ்ப்பாண வருகையின் ஓரங்கமாக தனது தாயார் கல்வி கற்ற கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு விஜயம் செய்தார்.

இதன்போது உள்ளக கரப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற ஆசிரிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தார்.

(அ)

# பல மாகாணங்களில் சீரற்ற காலநிலை

கொழும்பு, ஜுன் 07

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 75 மில்லிமீற்றருக்கும் அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்று முன் தினம் இரவு பெய்த கடும் மழை காரணமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் நில்வள கங்கை சில இடங்களில் பெருக்கெடுத்துள்ளது.

அத்துடன், அக்குரஸ்ஸை - சியம்பலாண்டுவ பிரதான வீதியின் பாணதுகம பகுதி நீரில் மூழ்கியுள்ளது. அதனால் குறித்த வீதியில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

எனவே பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொது மக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

(அ)

## வரணி...

சேர்ந்த குண செல்வம் நிரோஜன் (வயது 31) என்பவரே உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு முல்லைத்தீவு வற்றாப் பளை அம்மன் ஆலய பொங்கல் திருவிழாவில் பங்கேற்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ-02)

## வெறும்...

திராசா, கி. துரைராஜசிங்கம் ஆகியோ ரும் கட்சியின் வரலாறு தொடர்பில் கூறினர். சுமார் ஒன்றரை மணி நேரம் தொடர்ந்த இந்த உரைகளின் முடிவில், எதற்காக இந்தக் கூட்டம் கூட்டப் பட்டது என்று சிறீதரன் எம். பி. கேள்வி எழுப்பினார். எவரும் பதிலளிக்காத நிலையில், இந்தக் கூட்டம் நிறைவடைந் ததாக அறியவந்தது. (ஐ)

## குற்றவாளியை...

அனுமதிக்கக்கூடாதென மருதங்கேணி பொலிஸார் தாக்கல் செய்தி அறிக்கையின் படி, கஜேந்திரகுமாருக்கு வெளி நாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

தன் இனத்துக்காகக் குரல் கொடுத்த மக்கள் பிரதிநிதி அச்சுறுத்தப்பட்டார். அவரை அச்சுறுத்த முயன்றவர்கள் கைது செய்யப்படாமல் - அச்சுறுத்தப்பட்டவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தான் இந்த நாட்டின் நீதியா - சட்டமா? இதை எம்மால் புரிந்து கொள்ள முடி யாமலுள்ளது.

இதுதான் கடந்த காலங்களிலும் இந்த மண்ணில் நடந்துள்ளது. மருதங் கேணி சம்பவத்தில், அச்சுறுத்தல் விடுத்த புலனாய்வாளர், பரீட்சை மண்டபத்தில் பாதுகாப்புக்கு நின்ற பொலிஸ்காரரின் துணையுடன் நிற்கிறார். அச்சுறுத்தப்பட் டவர்கள் பற்றி அரசும் அக்கறையின்றி யுள்ளது.

குமார் பொன்னம்பலம் இந்த மண் ணில் சுட்டுக் கொல்லப்பட்டார். நீதி கிடைக்கவில்லை. ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் சுட்டுக்கொல் லப்பட்டனர். சுட்டவர்கள் பாராளுமன் றத்தில் உள்ளனர் - அமைச்சர்களாக உள் ளனர் - இணைத்தலைவர்களாக உள்ள னர் - சுட்டவர்கள் தண்டிக்கப்படவில்லை.

இந்த நாட்டில் நியாயம் பற்றி பேசுப வர்கள் துப்பாக்கிமுனையில் அச்சுறுத்தப் படுகிறார்கள். வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி அண்மையில் மிரட்டும் பாணி யில் பேசியுள்ளார். புலம்பெயர் தமிழர்க ளுடன் இணைந்து மீண்டும் துப்பாக்கி கலாசாரத்தை ஏற்படுத்த முனைவதாகக் கூறியுள்ளார். அவர் மீண்டும் துப்பாக்கி களை எடுப்போம் என மிரட்டுகிறார். நாங்கள் செய்வதை செய்வோம், நீங்கள் பொத்திக் கொண்டிருங்கள் என்பதுதான் இதன் அர்த்தம்.

அலி சப்ரி போன்றவர்களுக்கு புனர் வாழ்வளிக்க வேண்டும். நீதி, இன நல்லி ணக்கம் என்றால் என்ன என்பதை கற் பிக்க வேண்டும். எப்படி ஆனவர்களுக்கு புனர்வாழ்வளித்தால்தான் துப்பாக்கியை எடுப்பது பற்றிய கதைகளை நிறுத்த லாம். அலி சப்ரி மீண்டும் ஒரு போரை விரும்புகிறாரா?

கஜேந்திரகுமாரை துப்பாக்கி முனை யில் சுடலாம் என்று இந்த அரசு நினைத் தால் அது மோசமான முன்னுதாரணம். அரச பயங்கரவாதத்தின் தெளிவான செய்தி. தன்னை லிபரல்வாதியாக காட் டும் ஜனாதிபதி ரணில், மிகப்பெரிய பயங்கரவாதியாக, சர்வாதிகாரியாக இன் னொரு முகத்தை காட்ட முயன்றுள்ளார். இதன் இன்னொரு வடிவம்தான் கஜேந் திரகுமார் மீதான ஒடுக்குமுறை.

கஜேந்திரகுமார் வெளிநாட்டு பய ணத் தடைக்கு உள்ளாகியுள்ளார். அவர் பயங்கரவாதியா? துப்பாக்கி வைத்திருந் தாரா? துப்பாக்கி வைத்திருந்தவன் ஓடிப் போய் நிற்கிறான். குற்றம்செய்தவனை தண்டிக்கவில்லை. இதுதான் இந்த நாட் டின் நீதியமைப்பு. குற்றம் செய்தவனை நீதிபதியாக்குகிறீர்கள். யார் சுட்டானோ, வெட்டினானோ அவனை நீதிபதியாக்கி நீதி வழங்க முற்படுகிறீர்கள் - என்றார். (ஐ)

## கஜேந்திரகுமார்...

கஜேந்திரகுமார் எம். பிக்கு பயணத் தடை விதிக்கப்பட்டது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கும் வரை இந்த வெளிநாட்டு பயணத்தடை நீடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கில் கஜேந்திரகுமார் எம். பி. பங் கேற்றிருந்த நிகழ்வில் பொலிஸ் புலனாய் வாளர்கள் இருவர் தன்னை தாக்கினர் என்றும் மற்றொரு பொலிஸ்காரர் கைத் துப்பாக்கியால் குறிவைத்து உயிர் அச் சுறுத்தல் விடுத்தார் என்றும் அவரே தெரிவித்திருந்தார். இந்தச் சம்பவம் தொடர்பில் அவரை வாக்குமூலம் அளிக் குமாறு மருதங்கேணி பொலிஸார் அழைப்பு விடுத்திருந்தனர். பாராளுமன்ற கூட்டத் தொடரில் பங்கேற்பதால் எதிர் வரும் திங்கட்கிழமை வரை அங்கு செல்ல மாட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையிலேயே கிளிநொச்சி நீதி வான் நீதிமன்றம் கஜேந்திரகுமார் எம். பிக்கு பயணத் தடை விதித்துள்ளது என் பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மக்கள்...

காலத்தில் அந்த சட்டமூலம் புதியதாக மீளக் கொண்டுவரப்பட்டது. சுமந்திரன் எம். பி கொண்டு வந்த இந்த சட்ட மூலத்தை மனோ கணேசன் எம். பி. வழி மொழிந்திருந்தார். அந்த சட்டமூலத்தை அரசாங்கம் வர்த்தமானியாக அறிவித் தது. இந்த சட்டமூலம் அடிப்படை உரி மைகளை மீறுவதாகக் கூறி இரு சிங்கள அமைப்புகள் உயர்நீதிமன்றத்தை நாடின.

இது தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் நடந்த விசாரணையில் சட்டமூலத்தில் சரத்து ஒன்றும், சொல் ஒன்றும் தேவை யற்றவை என்பதால் அவற்றை நீக்குமாறு உயர்நீதிமன்றம் தெரிவித்தது. இதனை மனுதாரரான சுமந்திரன் எம். பியும் ஏற் றுக்கொண்டிருந்தார். இதையடுத்து, உயர் நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியிருந்தது.

அதில்,"மாகாண சபைகள் தேர்தல் மக்களின் இறைமையை பிரயோகிக்கும் தேர்தலாகும். அது கால தாமதமின்றி நடத்தப்பட வேண்டும் என்பதை நாங்க ளும் ஏற்றுக்கொள்கிறோம்" என்று கூறி யிருந்தது. இந்தத் தீர்ப்பை பாராளுமன் றத்துக்கு சபாநாயகர் நேற்று அறிவித்தார்.

இதன்படி, சில வருடங்களுக்கு முன் னர் நடந்த வழக்கு ஒன்றில் உயர்நீதிமன் றம் மாகாண சபைகள் தேர்தல் மக்கள் இறைமையை பிரயோகிக்கப் பயன்படுத் துவதற்கான தீர்ப்பு என்று வழங்கிய தனது தீர்ப்பை அது மீளவும் உறுதிப் படுத்தியுள்ளது.

அரசமைப்பு சட்டத்தின்படி பாராளு மன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தல், மக் கள் தீர்ப்பு ஆகிய மூன்று சந்தர்ப்பங்களி லுமே மக்களின் இறைமை பிரயோகிக் கப்படுகின்றது என்று கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் இது மிக முக்கியமான தீர்ப்பாக பார்க்கப்படுகின்றது.

முன்னதாக, மாகாண சபைகள் தேர் தல் திருத்தச் சட்டம் 2017ஆம் ஆண்டு அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் ஆதரவுடன் கொண்டுவரப்பட் டது. இதன்போது, மாகாண சபைகள் தேர்தல் முறைமை நீக்கப்பட்டு புதிய தொகுதி - விகிதாசார சேர்ந்த கலப்பு தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட் டது. இதேநேரம், அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே தடவையில் தேர் தலை நடத்தவும் திட்டமிடப்பட்டது. இதனை, ஒரு வருட காலத்துக்குள் நிறைவேற்றுவது என்றும் முடிவானது.

ஆனால், இதேமுறைமையில் நடத் தப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தலின் முடிவுகள் பல கட்சிகளுக்கு அதிருப் தியை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து தேர்தல் முறைமையை மாற்றியமைக்க கட்சிகள் விரும்பின. இதையடுத்து மாகாண சபைகள் தேர்தலை நடத்த முடியாமல் போனது. இதையடுத்தே சுமந்திரன் எம். பி. மாகாண சபைகள் தேர்தல் திருத்தத்தை தனிநபர் சட்டமூல மாக கொண்டுவந்தார் என்பது நினை வில் கொள்ளத்தக்கது.

# ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தின் சில பிரிவுகள் அரசமைப்புக்கு முரண்!

## உயர்நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்தார் சபாநாயகர்

கொழும்பு, ஜூன் 07

ஊழல் ஒழிப்பு சட்டமூலத்தின் சில பிரிவுகள் அரசமைப்புக்கு முரணாக உள் ளது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள தாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபே வர்த்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சட்ட விதிகளுக்கு முரணான விட யங்களை திருத்தினால் எந்தப் பிரச் னையும் ஏற்படாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளதாக சபாநாயகர் தெரி வித்துள்ளார்.

நாட்டில் லஞ்சம் மற்றும் ஊழலை தடுக்கும் வகையில், கடந்த ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி இந்த ஊழல் தடுப்பு சட்ட மூலம் பாராளுமன்றத்தில் தாக்கல் செய் யப்பட்டது. இந்த சட்டமூலம் தொடர் பான வர்த்தமானி அறிவிப்பு கடந்த ஏப்ரல் 3ஆம் திகதி வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# நெடுந்தீவு ஆறு பேர் கொலை சந்தேகநபரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 07

நெடுந்தீவில் இடம்பெற்ற 6 பேர் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிக்கப் பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது, மூவரி டம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட் டன.

இந்த நிலையில், சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் கஜ நிதிபாலன் உத்தரவிட்டார். அத்து டன், வழக்கும் அன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.



கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி அதி காலை நெடுந்தீவில் 5 பேர் வெட்டி கொலை செய்யப்பட்டனர். சம்பவத்தில் காயமடைந்த யாழ். போதனா மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வந்த 100 வயது மூதாட்டி பின்னர் சிகிச்சை பல னின்றி உயிரிழந்தார் என்பதும் குறிப் பிடத்தக்கது. (ஐ-03)

## காரைக்கால்..

அனுமதிகளை கோரியுள்ளன.

இதனிடையே காரைக்கால் - காங் கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் சேவையை கடந்த மே மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்க முதலில் திட்ட மிடப்பட்டிருந்தது.

இந்திய தரப்பில் மேலும் கால அவ காசம் கோரியதால், பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது ஒத்திவைக் கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக் கது. (ஐ)

## படை வசமுள்ள...

டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதேபோன்று, வலி வடக்கு பிரதே சத்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசுடமையாக்குவது தொடர் பாக வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளில் சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடு விக்கப்பட்டுள்ளன. இதனால், குறித்த வர்த்தமானியை மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட் டுள்ளன.

மேலும், காணி விடுவிப்பு தொடர் பான தெளிவூட்டல்களை மக்களுக்கு வழங்கி, மக்களின் ஒத்துழைப்புடன் காணிகளை விடுவிப்பதற்கு தேவையான காணி அளவீடுகளை மேற்கொள்ளவும் இன்னமும் நலன்புரி முகாம்களில் தங்கி யிருப்பவர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்து மீள்குடியேற்றவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு செயலர் சாகல ரத்நாயக்க தலைமையில் நடந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில் நடைபெற்ற இந்தக் கலந்து ரையாடலில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (ஐ-03)

## கட்சியின்..

இந்த நடவடிக்கைகள் மூலம் இளை ஞர்கள் கட்சியின் செயல்பாட்டு வேலைத் திட்டங்களில் பங்கெடுப்பதை தடுப்ப தற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

வடமராட்சி கிழக்கு சம்பவம் தொடர் பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கஜேந்திரகுமார் எம். பிக்கு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் அவரை தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'தமிழ்த்தேசிய அரசியலை' முழுமை யாக இல்லாமல்செய்வதே அரசாங்கத் தின் நோக்கம். அதனை முன்னிறுத்தியே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படுகின்றன. கடந்த 2018 ஆம் ஆண் டின் பின்னர் எமது கட்சியின் வளர்ச்சி அபரிமிதமானதாகவும், தவிர்க்கமுடி யாத ஒன்றாகவும் மாறியது.

நாம் 'ஜனநாயகம்' என்ற கருத்திய லுக்கு அப்பால் 'தமிழ்த் தேசியம்' என்ற கோணத்திலேயே நீண்டகாலமாகச் செயல்பட்டு வருகின்றோம். எனவே, அதனை முடக்கும் நோக்கிலேயே இத் தகைய அச்சுறுத்தல் நடவடிக்கைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளன. இருப் பினும், இவையனைத்தும் சட்டவிரோத நடவடிக்கைகளாகும் - என்றார்.

இதேவேளை, இளைஞர்களே எமது கட்சியின் பலம். இவ்வாறான அச்சுறுத் தல்களின் மூலம் இளைஞர்கள் கட்சியின் வேலைத்திட்டங்களில் பங்கெடுப்பதைத் தடுப்பது அரசாங்கத்தின் முக்கிய நோக் கம் என்றும் சாடியுள்ளார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

## கிண்ணியா வாகன விபத்தில் கணவனும் மனைவியும் பலி!



கொழும்பு, ஜுன் 07

கட்டுநாயக்கவில் இருந்து திருகோணமலை நோக்கிச் சென்ற வான் ஒன்றும் திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த சிமெந்து ஏற்றிய கொள்கலனும் கித்துல் உதுவ சிங்கப்புர பிரதேசத்தில் நேற்று பிற்பகல் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இதில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் கொள்கலன் புரண்டு விழுந்ததுடன் வானுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. சம்பவத்தில் வானில் பயணித்த கணவன்,மனைவி உயிரிழந்துள்ளனர்.

வானில் பயணித்த ஒருவரும்,கொள்கலன் சாரதியும் சம்பவத்தில் காயமடைந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்கள் கந்தளாய் வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளன.

சம்பவத்தில் படுகாயமடைந்துள்ள ஒருவர் திருகோணமலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதான முஸ்தபா அலப்தீன், 45 வயதான முஸ்தலின் சுஹய்லா உம்மா ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். (அ)

## ஜனாதிபதியாவதற்கு எனக்கு தகுதி உண்டு

### சம்பிக்க ரணவக்க கூறுகிறார்



கொழும்பு, ஜுன் 07

இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவிக்கு வரும் தகுதிகள் தனக்கு இருப்பதாக ஐக்கிய குடியரசுக் கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தொலைக்காட்சி ஒன்றில் ஒளிப்பரப்பான பேட்டியில் அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா, அதற்கு முன்னர் நடக்குமா, ஜனாதிபதி அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி அதனைச் செய்வாரா என்பது எமக்கு தெரியாது.

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் நாங்கள் அதற்கு தயார். பொதுத் தேர்தலுக்கு தயாராகவே இருக்கின்றோம்.

ஜனாதிபதியாக பதவிக்கு வருவது உங்களது எதிர்பார்ப்பா என அனைவரும் என்னிடம் கேட்கின்றனர்.

ஜனாதிபதியாக பதவிக்கு வருவதில் என்னிடம் இல்லாத தகுதிகள் என்ன என்று நான் கேட்கிறேன்.

நாங்கள் சாதாரண குடும்பத்தில் இருந்து வந்தவர்கள் என்பதா?, கொழும்பில் உள்ள பெரிய பாடசாலைகளில் கல்வி கற்கவில்லை என்பதா?, எமக்கு சர்வதேச அனுபவங்கள் இல்லை என்றா கூறுகின்றனர்?.

நான் சர்வதேச தளத்தில் உள்ள நிறுவனங்களில் பணியாற்றியுள்ளேன். நான் வியன்னா மாநாட்டின் தலைவராக பதவி வகித்துள்ளேன்.

நாட்டில் மிகப் பெரிய பல திட்டங்கள் எனது தலைமையில் வெற்றிகரமான முடிக்கப்பட்டன-என்றார். (அ)

# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசினால் 39,000 ஆசிரியர்களுக்கு நியமனம்

### இதில் கல்வியற் கல்லூரி பயிலுநர்கள் 7ஆயிரம் பேர்

கொழும்பு, ஜுன் 07

**தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு 39,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இம்முறை ஒரே நேரத்தில் இரண்டு மடங்கு ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதால் கடுமையான ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்வியற் கல்லூரி ஆசிரியர்கள் பயிலுனர்கள் ஏழாயிரம் பேருக்கு எதிர்வரும் 16ஆம் திகதி நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இதனை தவிர தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் நிலவும் வெற்றிடங்களை நிவர்த்தி செய்ய 26 ஆயிரம் பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளதாவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# அரசியலில் பிரவேசிப்பவர்களுக்கு வரிக் கோப்பு கட்டாயமாகின்றது!

கொழும்பு, ஜுன் 07

அரசியலில் பிரவேசிக்கும் அனைவரும் வரிக் கோப்பொன்றைத் திறப்பது கட்டாயம் எனவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் போது அது ஆரம்பிக்கப்படும் எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக அமைச்சுப் பணியாளர்கள் வரிக் கோப்புகளைத் தொடங்குவது கட்டாயமாக்கப்படும் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (அ)

# ஜனாதிபதி தேர்தலை நடத்த திட்டமிடுகிறதா அரசாங்கம்?

கொழும்பு, ஜுன் 07

அடுத்த வருட ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவை உறுப்பினர்கள், ஆளும் கட்சியின் தலைவர்கள் மற்றும் பொதுஜன பெரமுனவின் மாவட்ட தலைவர்களை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்து அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் குறித்து தெளிவுபடுத்தியிருந்தார்.

இது அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான முன் ஏற்பாடாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.

எதிர்மறை மட்டத்தில் இருந்து வந்த நாட்டின் பொருளாதாரத்தை சற்று முன்நோக்கிக் கொண்டு வந்துள்ளதாகவும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதமளவில் நேர்மறை மட்டத்துக்கு கொண்டு வர முடியும் எனவும் ஜனாதிபதி இதன்போது கூறியுள்ளார்.

இதனால், மக்கள் மத்தியில் சென்று அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் பற்றி விளக்குமாறு ஜனாதிபதி, அமைச்சர்கள் மற்றும் பொதுஜன பெரமுனவின் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எந்த தேர்தலை எதிர்கொள்ளவும் கிராம மட்டத்திற்கு என்று அதற்கான பின்னணியை உருவாக்குமாறும் ஜனாதிபதி கோரியுள்ளதாக தெரியவருகிறது. (அ)

# சிறுவர் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்தது

கொழும்பு, ஜுன் 07

இலங்கையில் கடந்த 8 வருடங்களில் சிறுவர் (இளம்பராய) குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் கலந்துகொண்டு மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்க, 2015ஆம் ஆண்டு முதல் தற்போதுவரையில் சிறுவர் சீர்திருத்த பள்ளிகளில் பயிற்சிகளை பெற்ற சிறுவர் குற்றவாளிகள் தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இக்கேள்விக்குப் பதிலளித்த போதே நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015ஆம் ஆண்டில் 43 பேரும், 2016ஆம் ஆண்டு 38 பேரும், 2017ஆம், 2018ஆம், 2019ஆம், 2020ஆம், 2021ஆம் மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் முறையே 33, 38, 36, 27, 19, 11 என்கிற எண்ணிக்கையில் சிறுவர் குற்றவாளிகள், சிறுவர் சீர்திருத்தப் பயிற்சி பள்ளிகளில் பயிற்சிகளை பெற்றுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவின்படியே சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளில் சிறுவர் குற்றவாளிகள் அனுமதிக்கப்படுவார்கள். அதிகபட்சமாக 3 வருடங்கள் தண்டனையே இவர்களுக்கு வழங்கப்படும்.

இந்த பள்ளிகளில் பயிற்சிகள் வழங்கப்படாது. மாறாக மனோ வைத்தியமுறையைப் பின்பற்றி அவர்களின் மனநிலைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சாதாரணத் தரப் பரீட்சைகளை இலக்காக் கொண்டு அவர்களுக்கு கற்றல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இந்த சிறுவர் சீர்த்திருத்தப் பள்ளிகளில் தண்டனைக் காலத்தை நிறைவு செய்தவர்களுக்கு நேரடியாகத் தொழில் வாய்ப்புகளை வழங்காவிட்டாலும், அதற்கான வழிகாட்டல்களை வழங்குவோம். சிறுவர் குற்றவாளிகள் தொடர்பான சட்டத்தை இக்காலத்துக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்படும் - என்றார். (அ)

# இரும்பின் விலை 50 வீதம் குறைப்பு

கொழும்பு, ஜுன் 07

இந்த ஆண்டின் தொடக்கத்தில் இரும்பு விலை சுமார் 50 வீதம் குறைந்துள்ளதாக இரும்பு இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி வலுவடைந்து வருவதே இதற்கு பிரதான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக மெல்வா நிறுவனத்தின் பணிப்பாளர் மஹிந்தரத்ன தென்னக்கோன் தெரிவித்தார். (அ)

# கம்பளையில் நிலநடுக்கம்!

கொழும்பு, ஜுன் 07

கம்பளையில் 2.0 ரிக்டர் அளவில் சிறிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இரவு பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.